# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 மார்ச் - 2001 இதழ் - 3



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத் தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர் களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*
*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண் 27,*
***காங்கயம்*** - 638 701. இந்தியா

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | **ஏலகிரி முகாம் அழைப்பிதழ்** | 09 |
| 3. | புதிய ஏற்பாட்டு ஐக்கியம் | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | 1. இராஜாக்கள் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | வேதாகமக் கேள்வி- பதில் | 20 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| 9 | தெரிந்து கொள்ளுங்கள் | 29 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor
***S. RAJANAYAGAM***

Honorary Editor
***J.C. CHOATE***

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 March- 2001 Issue - 3**

*ஆசிரியவுரை*

# ... ஏன் என்னைக் கைவிட்டீர்?

ஒருவருடைய எதிர்பார்ப்பு முற்றிலும் பொய்த்துப் போகும்போது, அவர் யாரை நம்பியிருந்தாரோ, அவரைப் பார்த்துக் கேட்கப்படும் இறுதிக் கேள்விதான் ஏன் என்னைக் கைவீட்டீர்? என்பது. இக்கேள்வியை எல்லோரும் எல்லோரிடத்திலும் கேட்டுவிடமுடியாது. இப்படிக் கேட்பதற்கு, சம்பந்தப்பட்ட இருவருக்குள் ஒரு சரியான உறவும், அந்த உறவினடிப்படையில் ஒரு விசேஷித்த நெருக்கமும் இருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், இப்படிக் கேட்பது, அர்த்தமற்றதாகவும், சிலநேரங்களில் அவமானத்தைக் கொண்டுவரக் கூடியதாகவும் மாறிவிடும்.

சரி, நாம் இங்கே, ஒரு மனிதன், இன்னொரு மனிதனிடத்தில், ஏன் என்னைக் கைவீட்டீர் என்று கேட்டது பற்றி பார்க்கப்போவதில்லை. ஏனெனில், அப்படிப் பார்ப்பது நமக்கு எந்தவொரு ஆன்மீக நன்மையையும் விளைவிக்காது. மாறாக, நாம் ஆன்மாவில் பலப்படத்தக்கதாக, தேவத்துவத்துள் இரண்டாமவராக இருப்பவர். முதலாமவரிடத்தில் கேட்ட ஒரு கேள்வி பற்றியே நாம் பார்க்க உள்ளோம். ஆம், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, சிலுவையில் தொங்கினபோது, தன்னுடைய பரலோகத் தந்தையை நோக்கி, *''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவீட்டீர்''*(மத்.27:46)என்று கேட்டுக் கதறினார் அல்லவா, அது பற்றித் தான் ஆராய்ந்து பார்க்க உள்ளோம்.

சர்வ வல்லமையுள்ள பரலோகத்தின் தேவன், அவருடைய உண்மைப் பிள்ளைகளுக்குத் தாராளமாகத் தந்திருக்கிற வாக்குத்தத்தங்களுள் ஒன்று, ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை'' என்பது

(எபி.13:5). இப்படிச் சொன்ன விண்ணுலகத் தந்தை, தமது ஒரே பேறான குமாரனை, ஒரு கட்டத்தில் கைவிட நேர்ந்தபடியால்தான், அந்தக்குமாரன், *''ஏன் என்னைக் கைவிட்டீர்?'* என்று கதறியுள்ளார். அப்படியானால்,வாக்கு மாறாத தேவன், தன்னுடைய ஏக சுதனனக் கைவிடுமளவுக்கு என்ன நேர்ந்தது? நீரும், நானும் ஒன்றாயிருக்கிறதுபோல, நம்மைப் பின்பற்றுகிற இவர்களெல்லாம் ஒன்றாயிருக்க வேண்டுமென்று, உள்ளமுருகி ஜெபித்த இயேசுவானவர், ஏன், தான் கைவிடப்பட்டதாக ஒரு கட்டத்தில் உணர்ந்தார்? இதற்கான பதிலைப் பெற்றே ஆக வேண்டிய மிகப் பெரிய கேள்வி இது.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படியாக வந்த தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவானவர், *என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?* என்று எப்படிப்பட்ட மன நிலையோடு சொல்லியிருப்பார் என்று எண்ணிப் பாருங்கள். அக்கணத்தில், ஒரு பாவமும் அறியாத இயேசுவானவர் அடைந்திருக்கக் கூடிய துக்கத்தை, மன பாரத்தை உங்களால் அளவிட முடிகிறதா? அவர் சரீரத்தில், தாங்க முடியாத பாடுகளை ஏற்றுக்கொண்டு, வேதனைப்பட்ட போது இப்படி கலங்கிக் கதறவில்லை. மாறாக, ஆவிக்குரிய ரீதியில், தன்னால் தாங்கவே முடியாத தருணம் வந்தபோதுதான், தன்னுடைய தகப்பனை நோக்கி, ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறியுள்ளார். இந்தக் கதறுதலுக்கான காரணம் என்னவென்று, நாம் கண்டுபிடிப்பதற்கு முன்பாக, அவர் சரீரத்தில் பட்ட பாடுகள் சிலவற்றை பார்த்து விடலாம்.

உண்மையில் அவருடைய வேதனை, வியாகுலம் போன்றவை கெத்செமனேயிலே ஆரம்பமாகிவிட்டது. அங்கே, **அவருடைய வியர்வை, இரத்தத்தின் பெருந்துளிகளாய் வெளியேறும் அளவுக்கு வியாகுலப்பட்டார்.** (லூக்கா 22:44). அதைத் தொடர்ந்து *''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்''* என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஜீவனை விடும் வரை (லூக்.22:46) வேதனையோ வேதனை.

இப்பொழுது, அவர் சரீரத்தில் எப்படியெல்லாம் வேதனைப்பட்டார் என்பதைக் கொஞ்சம் பார்ப்போம்.

முதலாவது, தன்னுடைய பூமிக்குண்டான வாழ்வில் ஒரு குற்றத்தையும் ஒருபோதும் செய்திராத இயேசுவைப் பிடிப்பதற்கு, ஒரு கடுங் குற்றவாளியைச் சுற்றிவளைத்துப் பிடிப்பது போல, பட்டயங்களோடும், தடிகளோடும் வந்தார்கள். (லூக்.22:52). ஒருவேளை, இன்றைய நாட்களில் நவீனரக துப்பாக்கி ஏந்தியவர்கள் புடைசூழ நடந்து செல்வது, கனத்திற்கும் , மரியாதைக்கு முரிய ஒன்றாக இருக்கலாம். ஆனால், அன்றைய நாட்களில்? தடிகளோடும், பட்டயங்களோடும் ஒருவனை அழைத்துச் செல்வது கனவீனத்திற்கும், அவமரியா தைக்குமுரிய ஒன்று. அவரைக் கேவலப்படுத்த வேண்டுமென்று, திட்டமிட்டுச் செய்யப்பட்ட இச்செயல், அவருக்கு எவ்வளவு மனவேதனையைத் தந்திருக்கு மென எண்ணிப் பாருங்கள். ஆனால், ***மிகக் கேவலமாக நடத்தப்பட்ட, இந்நிலையில் கூட, என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?*** என்று அவர் கேட்கவில்லை.

அடுத்து, இயேசுவின் மீது பொய்யாகக் குற்றம் சாட்டினார்கள். வேலியே பயிரை மேய்ந்த கதையாக, நீதிக்கும், உண்மைக்கும் துணை நின்று, தோள் கொடுக்க வேண்டிய பிரதான ஆசாரியரும், மூப்பரும், சங்கத்தாரும் அவருக்கெதிராகப் பொய்ச் சாட்சியைத் தேடினார்கள். (மத்.26:59). ***"... அன்றியும், மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்"*** (மத்.26:64) என்று உண்மையை பட்டவர்த்தனமானச் சொன்னதற்காக, ***"தேவ தூஷணம்"*** சொன்னான் என்றார்கள். பிரதான ஆசாரியரும், மூப்பரும் அவர் மேல் பொய்யாய்க் குற்றஞ்சாட்டுகையில் அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை (மத்.27:12). இப்படி பொய்யான குற்றச் சாட்டுகளை அவர் மீது, மனச்சாட்சியற்ற முறையில் அடுக்கி, ***அவரை வேதனைப்படுத்திய போது கூட,*** மௌனம் தான் காத்தாரேயொழிய, *என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்* என்று கதறவில்லை.

பிறகு, விசாரணை என்ற பெயரில் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டார். தன்னுடைய சீடர்களுடன் பஸ்கா போஜனம் எடுத்த வீடு, எருசலேம் நகரத்தின் தென்மேற்கில் இருந்தது. அங்கிருந்து நகரத்தின் வடகிழக்கில் இருந்த கெத்செமனேவுக்கு நடந்து வந்தார். தோட்டத்திலிருந்து, முதலாவது அன்னாவின் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டார். பிறகு, காய்பாவின் வீட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டு, அரசியல் சனகரீம் சங்கத்தால் விசாரிக்கப்பட்டு, நீ நிரபராதி என்று வாதிடலாம் என்று சவால் விடப்பட்டார். பிறகு, ஆன்மீக காரியங்களுக்குப் பொறுப்பாகவுள்ள, பரிசேயர்கள் அதிகமுள்ள சனகரீம் சங்கத்தால், தாறுமாறாக விசாரிக்கப்பட்டு, *மரணத்திற்குப் பாத்திரமான* **தேவதூஷணம் சொன்னான்** என்று ஒருமனதாக தீர்க்கப்பட்டார்.

இச்சமயத்தில், அந்த தேவக்குமாரன் மீது தங்களுக்கிருந்த ஆத்திரத்தை சற்றாகிலும் தணித்துக் கொள்ளும்படியாய், அவருடைய கண்களைக் கட்டி, முகத்திலே துப்பி, தலையிலே குட்டி, கன்னத்திலே அறைந்தார்கள் (மத்.26:67, லூக்.22:63-65)இப்படி, **சரீரப் பாடுகளுக்குத் தன்னை உள்ளாக்கும் நேரம் வந்துவிட்டபோது கூட** அவர் பிதாவை நோக்கி, *என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்* என்று கதறவில்லை.

அதன் பிறகு, கொலைவெறியும், பொறாமையும் கொண்ட அந்த யூதக் கும்பலுக்கு, தாங்கள் விரும்பியபடி, நமதாண்டவரைக் கொலை செய்ய,*ரோம அரசாங்கத்தின் அனுமதி அவசியப்பட்டது*. ஆகவே, பொழுது விடிந்தவுடன் அவரை தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவிடம் கொண்டு சென்றனர். நேர்மையும், நெஞ்சுரமும் அற்ற இக்கொலைக் கும்பல், அதுவரை தாங்கள் சாட்டின குற்றமாகிய ***"தேவ தூஷணக்காரன்"*** என்பதை, இடத்திற்கு இடம் நிறம் மாறும் பச்சோந்திகளைப் போல மாற்றி, ***"இவன் தன்னை யூதருடைய ராஜா"*** என்று சொல்லுகிறான் என்று இன்னுமொரு பொய்யைக் கூசாமல் கூறினர்.(லூக்.23:2,3). பிலாத்துவோ இவரிடம் ஒரு குற்றத்தையும் காணாமல் (23:4) இயேசு ஒரு

கலிலேயன் என்று அறிந்து, அப்போது எருசலேமுக்கு வந்திருந்த ஏரோது அந்திப்பாவிடம் விசாரணைக்காக அனுப்பினான். ஏரோது, எவ்வளவோ முயன்றும் (லூக்.23:9) அவர் வாயிலிருந்து எதையும் வரவழைக்க முடியாமல் போனது. ஆயினும் இயேசுவின் மீது, பிடிவாதமாகக் குற்றஞ்சாட்டுகிற யூதர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக, தன் பங்குக்கு, போர்ச்சேவகரோடேகூட அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, திரும்பவும் பிலாத்துவினிடத்திற்கே அனுப்பினான்.(23:11).

விசாரணை என்ற பெயரில், எருசலேம் நகர வீதிகளில் அவர் அங்குமிங்கும் விடி ய விடிய அலைக்கழிக்கப்பட்டதோடு, விடிந்தும் அந்தப் பாவிகள் விடாமல் இழுத்தடித்தனர். சரீர வேதனையும், மனவேதனையும் ஒன்றுசேர்ந்த நிலையில், ஊண் உறக்கமில்லாத நமதாண்டவரை, 5.கி.மீட்டருக்கும் குறைவில்லாத தூரம் நடக்கடித்தனர். அப்பொழுது கூட, தன்னை அனுப்பின பிதாவை நோக்கி,*என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்* என்று கேட்கவில்லை.

நிர்பந்தத்திற்கு அடிபணியும் மனச்சாட்சியற்ற மனிதனாகிய பிலாத்துவிடம் இயேசு, மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அவன் இயேசுவை வாரினால் அடிக்க ஒப்புக்கொடுத்து, தனது கையாலாகாத்தனத்தை அப்பட்டமாக ஒத்துக்கொண்டதோடு, தான் வகித்த பதவிக்கு ஒரு நிரந்தரமான களங்கத்தைத் தேடிக்கொண்டான். முதுகெலும்பற்ற இந்தப் பிலாத்து அவரை, வாரினால் அடிக்க ஒப்புவித்தபோது, அவர் உண்டு, உறங்கி சுமார் 30 மணி நேரமாகிவிட்டது. அத்தோடு, அவர் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்ட களைப்பு வேறு. இச்சமயத்தில், அவர் மனநிலை எப்படியிருந்திருக்கமென்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இங்கே, சவுக்கடி நிறைவேற்றப்படும் முறை குறித்து, கொஞ்சம் எடுத்துச் சொன்னால் பிரயோஜனமாக இருக்குமென்று நம்புகிறேன்.

ரோம அரசாங்கத்தாலே நிறைவேற்றப்பட்ட சவுக்கடியானது, குற்றவாளி கிட்டத்தட்ட நிர்வாணமாக்கப்பட்டு, மரத்திலே கட்டப்பட்ட நிலையில் கொடுக்கப் படும். விழும் அடிகளைத் தடுக்கக் கூடாதென்பதற்காக,குற்றவாளியின் இரண்டு கைகளையும் இணைத்து, மேலே தூக்கி மரத்தோடு சேர்த்து கட்டிவிடுவார்கள். பிறகு பிரத்யேகமாகப் பயிற்றுவிக்கப்பட்ட இரண்டு ரோமச் சிப்பாய்கள் , கடுமையான முறையில் இத்தண்டனையை நிறைவேற்றுவார்கள். இதற்கு இரண்டுபேர் குறிக்கப்படுவதன் நோக்கம், குற்றவாளிக்கு சிறிது கூட இடைவெளி கிடைக்காமல், சவுக்கடி விழுந்து கொண்டே இருக்க வேண்டுமென்பதுதான். பொதுவாக இந்த சவுக்கடி நிறைவேறும்போது, ஒரு குற்றவாளி நினைவிழந்து, கிட்டதட்ட மரணத்தை ருசி பார்க்கும் நிலையை எட்டி விடுவான்.

சவுக்கு என்பது, நீண்ட மரக் கைபிடியுடன் இணைக்கப்பட்ட, வித்தியாசமான அளவுகளைக் கொண்ட தோல் வாரினால் ஆக்கப்பட்டிருக்கும். எப்படி

இழுத்தாலும் அல்லது அடித்தாலும் அறுந்து போகாத, பலமான தோல் வாரின் நுனிகளில் உலோகக் குண்டுகளும், எழும்புத் துண்டுகளும் பொருத்தப் பட்டிருக்கும். இப்படிப்பட்ட சவுக்கைக் கொண்டு, இரண்டு சிப்பாய்கள் மாறி, மாறி அடிக்கும் போது, உழவன் நிலத்தை உழுவது போல, குற்றவாளியின் முதுகு, சவுக்கடியால் உழப்படும். இந்த சவுக்கடி பற்றி சுவிசேஷத்தில் விபரமாக இல்லை. ஆனால், 1.பேதுரு.2:24-ல் *"அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"* என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், சவுக்கடியின் தன்மைபற்றி கொஞ்சம் ஊகித்துக்கொள்ள இது உதவுகிறது. இப்படி இயேசுவானவர், **மாறி, மாறி சவுக்கடி படும்போது கூட,** பிதாவை நோக்கி, *என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்* என்று கதறவில்லை.

பொதுவாக, சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு குற்றவாளி சவுக்கடிக்குப் பிறகு, சிலுவை மரத்தைத் தானே சுமந்து கொண்டு, கொல்கொதா மலைக்குச் செல்லவேண்டும். ஆனால், நம்முடைய இயேசுவாலே அப்படித் தூக்கி செல்லமுடியவில்லை. அங்கே,ஈவிரக்கமற்ற ரோமச் சிப்பாயின் கண்களில், இயேசுவுக்கு இரக்கம் கிடைத்தது.அப்படியானால், நமதாண்டவரின் சரீரம் எந்தளவு சின்னாபின்னப் படுத்தப்படிருக்கும் என்பதை அப்படியே மனக்கண்களாலே பார்த்துக் கொள்ளுங்கள். நிலைமை மிகவும் மோசமாக இருந்தபடியால் தான், சிரேனே ஊரானாகிய சிமியோன் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி பணிக்கப்பட்டான்.

ஆனால், எனக்கருமையானவர்களே ***இப்படித் தட்டுத் தடுமாறி, தள்ளாடிய நிலையில், கொல்கொதா மலைக்குச் செல்லும்போது கூட,*** *என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்* என்று அவர் கேட்கவில்லை.

பின்னே, எப்பொழுதுதான் கேட்டார் என்கிறீர்களா? பொறுங்கள், நேரம் நெருங்கிவிட்டது.

மிக கடுமையான சவுக்கடிக்குப் பின், அரை கி.மீட்டருக்கும் குறையாத தூரம் குற்றவாளி சிலுவையைச் சுமந்து சென்ற பிறகு, குற்றவாளிமல்லாக்காகப்படுக்க வைக்கப்பட்டு, ஐந்துமுதல் ஏழு அங்குல நீளமுள்ள கரடுமுரடான ஆணிகளால் கடாவப்படுவான். இரண்டு கைகளில் இரண்டும், இரண்டு கால்களையும் சேர்த்து ஒன்றுமாக, மூன்று ஆணிகள் அடிக்கப்பட்டு, சிலுவை மரம் தூக்கி நிறுத்தப்படும். அந்த மூன்று ஆணிகளால், சரீரத்தின் எடை முழுவதும் தொங்க வேண்டும். மூன்று ஆணிகளால் தொங்கி கொண்டிருக்கும், முழுச் சரீரம், மூச்சு வாங்குவதற்காக மேலும், கீழும் போகும் போது எப்படி இருக்கும் தெரியுமா? இந்த வேதனையை வர்ணிக்க வார்த்தைகளும் உண்டா? என்னிடத்தில் இல்லையென்பதைப் பணிவோடு ஒத்துக்கொண்டு, உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். வர்ணிக்க முடியாத இந்த வேதனை போதாதென்று , சவுக்கடியால் ஏற்பட்ட இரத்த காயங்களில் மொய்த்த கொசு, ஈ போன்ற பூச்சிகளின் தொல்லைவேறு. அப்பப்பா! எத்தனை வேதனை!!

இப்படி எல்லாப் பாடுகளும் நிறைவேறி முடியும் தருவாயில், அடுத்தது மரணம் தான் என்ற நிலையில், அதாவது இந்த உலகத்தின் ஒட்டுமொத்த

பாவத்திற்காக மரிக்கப் போகிறோம் என்ற ஒரு கட்டத்தில் தான் ஆவியில் கலங்கி, ஆன்மாவில் வியாகுலப்பட்டு, *"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்"* என்று தன் தகப்பனை நோக்கி கதறினார். அவருடைய பாடுகள் கெத்செமனேயில் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, ஒவ்வொரு கட்டத்திலும் பொறுமை காத்து எல்லாவற்றையும் சகித்துக் கொண்டே வந்த நமது ஆண்டவர், பல பாடுகள் தன்னைப் பலமாகத் தாக்கிய போதெல்லாம் தான் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உணராத இயேசுவானவர், இனிப் பாடுகள் அவ்வளவுதான் முடிந்தது என்ற ஒரு நிலைவரும் போது, தான் கைவிடப்பட்டதாக உணர்ந்தாரே, அது எப்படி? இப்படி அவர் சொன்னதற்கு என்ன காரணம்? தன்னுடைய பரலோகத் தந்தைதன்னை கைவிட்டதாக ஏன் முடிவு செய்தார்? அவர் விசாரிக்கப்பட்டதும், சிலுவைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதும் தேவனுடைய முன்னறிவின்படியானது. ஆயினும், தான் கைவிடப்பட்டதாக ஏன் அங்கே சொன்னார்?

தயவுசெய்து, இக்கருத்தை கவனமாகப் படியுங்கள். ஒருவன் தேவனுடைய குடும்பத்தில் வசனத்தின்படியாகப் பிறக்கும்போது, அவனுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலமாகிறது.(1.கொரி.6:19). மேலும், வேத வசனங்களின்படி பரிசுத்த ஆவியை பெற்ற ஒருவன், அவரை துக்கப்படுத்தக் கூடாதென்று எச்சரிக்கப்படுகிறான். (எபே.4:30)ஆகவே, ஒருவன் பாவம் செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் அவனை விட்டு போய் விட வாய்ப்புண்டு. (எபி.4:6-8). இக்கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு தொடர்ந்து படியுங்கள்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, "ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும், உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராய் இருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது." (எபி.2:17). அவர், சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தாலும், மற்ற தம்முடைய சகோதரர்களைப் போல இப்பூமிக்குரிய வாழ்வில் சோதிக்கப்பட்டும், ஒருபோதும் பாவம் செய்யவேயில்லை.(1.பேதுரு 2;22,23;எபி.4:15). இயேசுவானவர் தேவனுடைய குடும்பத்தில் முதற்பேறானபடியால், தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருந்தார். இந்த ஆவியிலே தான், அவர், இந்தப் பூமியில் அற்புதங்களையும், அடையாளங்களையும் வல்லமையாகச் செய்தார். மற்றும் தன்னுடைய நீதியான வாழ்க்கையினாலே, தேவத்துவத்துள் தன்னுடைய உறவு எவ்விதத்திலும் பழுதாகாமல் பூரணமாகக் காத்துக்கொண்டார்.

ஆனால், அவருடைய மரணத்தின்போது, நம் எல்லோருடைய பாவமும் அவர் மீது சுமத்தப்பட்டது. நித்திய காலமெல்லாம் தன்னைப் பரிசுத்தமாக காத்துக்கொண்டு, தேவத்துவத்துள் பரிபூரணமாக வாசம் செய்த அவர், அக்கணத்திலே, " பாவ மாக்கப்பட்டார்". பாவமிருக்கும் இடத்தில், பரிசுத்த ஆவியானவர் இருக்க முடியாதாகையால், நம்முடைய பாவங்களெல்லாம் அவர் மீது ஊற்றப்பட்டபோது, பரிசுத்த ஆவியானவர் அவரை விட்டு விலகினார். அந்நேரத்திலே இயேசுவானவரின் தெய்வீகமும், வல்லமையும் தற்காலிகமாக

இல்லாமற்போயிற்று. அப்பொழுது, தேவத்துவத்துள் பரிபூரணமாக வாசம் செய்த, இந்த தேவகுமாரன், நம்முடைய பாவத்தினிமித்தம் - உலகத்தின் பாவத்தினிமித்தம் அந்த கோர சிலுவையில் தனிமையில் மரிக்க நேர்ந்தது. ஆகவே தான், தன் தந்தையை நோக்கி, ***நித்திய காலமெல்லாம் ஒன்றாய் இருந்த என்னை இப்படிக் கைவிட்டு வீட்டீரே என்று கதறினார்.*** ஆம், வேதனை தாங்காமல் அவர் கதறவில்லை. இல்லைவேயில்லை, ஏன் கதறினார் என்பதற்கான காரணம் இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும் என நம்புகிறேன்.

கெத்செமனேயில் ஆரம்பித்து, சிலுவைவரை அவர் எத்தனையே பாடுகள் பட்டிருந்தாலும், அந்த வேதனைகளையெல்லாம் சத்தமில்லாமல் சகித்த நம் இயேசு. தான் பாவமாக்கப்பட்டபோது, தன் தகப்பனிடத்திலிருந்து மானிடரின் பாவத்தினால் பிரிக்கப் பட்டாயிற்று என்பதைத் தெரிந்தவுடன், வாய்விட்டு கதறினார். மகா சத்தமிட்டுக் கதறினார்.

எனக்கன்பானவர்களே, நம்முடைய இரட்சகரின் கதறுலுக்குக் காரணம் என்ன? பாடுகளோ அல்லது அதன் மூலம் வந்த வேதனைகளோ அல்ல. *பாவமே அதற்கு காரணம்.* இயேசுவானவரைக் கதறவைத்த பாவத்தைக் குறித்து நம்முடைய அணுகுமுறை எப்படியுள்ளது? சொல்லுங்கள். நமதாண்டவரைப் போல நம்முடைய பாவங்களுக்காக நாம் கதறாவிட்டால் பரவாயில்லை. அன்றாடம் நாம் செய்கின்ற பாவத்திற்காக குறைந்த பட்சம் மனஸ்தாபமாகிலும் படுகிறோமா? தினந்தோறும் எத்தனையோ பாவங்களை நாம் செய்து கொண்டுள்ளோம். ***''எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்ளாகி...''***(ரோம. 3:23) என்று தான் வேதாகமம் கூறுகிறது.அப்படியானால், பாவத்தைப் பற்றிய நம்முடைய கண்ணோட்டம் எப்படியுள்ளது? இயேசுவின் சீடன் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிற நாம், பாவத்தைப் பற்றிய நம்முடைய மனநிலை, இயேசுவை போல் இருக்கிறதா என்று சிந்திப்போம். வருடத்திற்கு ஒருமுறை, **வேதாகமத்தில் சொல்லப்படாத ஒரு நாளில்** இத்தலைப்பு குறித்து கொஞ்ச நேரம் பேசிவிட்டு அல்லது பேசுவதைக் கேட்டுவிட்டு, பிறகு பழையபடியே வாழ்ந்து கொண்டிருந்தால், விளைவு மோசமாயிருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

பாவம் இயேசுவைத் தேவனிடத்திலிருந்து தற்காலிமாக பிரித்தது. அவர்கள் உறவிலே விரிசலை உண்டாக்கியது. ஆகவேதான், தான் கைவிடப்பட்டதாக உணர்ந்து கதறினார். பாவம் எவ்வளவு கொடூரமானதாக இருக்கிறதென்று விளங்குகிறதா? இயேசுவுக்கே இந்த நிலையெனில், அன்றாடம் பாவத்தை துணிகரமாக செய்துகொண்டிருக்கும் நாம் தேவனோடு ஒன்றாயிருக்க முடியுமா? சொல்லுங்கள்.ஏசாயா தீர்க்கன் இதுபற்றி, ***''உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது''*** (59:2)என்று சொல்லியிருக்கிறான்.

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான நண்பரே! ஒருவேளை, பல பாடுகள் பட்டு, உனக்காகத் தன்னையே பாவமாக்கின இயேசுவின் தூய இரத்தத்தால் நீ கழுவப்படாமல் இருப்பாயானால், இப்பொழுதே நீ விசுவாசித்து

(ரோமர் 10:17) மனந்திரும்பி (அப்.2:38)இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு (ரோமர் 10:9,10)ஞானஸ்நானத்தின் மூலம் உன் பாவங்கள் போகக் கழுவப்படு (அப்.22:16).இதை நீ செய்வாயானால், இவ்வளவு பாடுகாள் பட்டு கொடுமையான முறையில், கோரச் சிலுவையில் தான் சிந்தின இரத்தத்தைக் கொண்டு சம்பாதித்த, ஒன்றான மெய்ச்சபையிலே உன்னைச் சேர்த்துக் கொள்வார். (அப்.2:47) அப்பொழுது தேவனுக்கும் உனக்கும் இருந்த பிரிவினை நீங்கி, நீ தேவனோடு சேருவாய். பிறகு, இந்த உறவில் நீ நிலைத்திருந்தால், தேவனும், நம்முடைய இரட்சகரும் வாசம் செய்யும் பரலோகம் ஒரு நாளில் உனக்குச் சொந்தமாகும்.

அன்பான சகோதரனே! நீ ஏற்கனவே வேதவசனங்களின்படி தேவனோடு ஒப்புரவாகியிருக்கிறபடியால், உன் வாழ்விலே பாவமற்றவனாக உன்னை காத்துக்கொள். நம்முடைய இரட்சகருக்குப் பாவத்தைப் பற்றிய சிந்தை எப்படி இருந்ததோ, அதே சிந்தையை நீயும் பெற்றுக்கொள்ள, ஒருவேளை, ஏதாவது சமய சந்தர்ப்பத்தால் பாவம் செய்ய நேர்ந்தாலும், அப்பாவம் உன் வாழ்வில் குடிகொள்ள அனுமதிக்காமல், அதற்காக மனஸ்தாபப்பட்டு, தேவனை நோக்கி வேண்டிக்கொள், தேவன் உன்னை மன்னித்து தம்மோடு சேர்த்துக் கொள்வார்.(அப்.8:22)

ஒருவரும் பாவத்தோடு, பரிசுத்த தேவனிடத்தில் நாம் சேர முடியாது. தம்முடைய சொந்த குமாரரென்றும் பாராமல், அவரையே பாவத்தினிமித்தம் கைவிட்ட தேவன், பாவத்திலிருக்கும் நம்மைச் சேர்த்துக்கொள்வாரென்று நினைத்து ஏமாந்து போகாதே. இக்காரியத்தில், நாம் நம்மை சரியாக்காவிட்டால், நம்முடைய இழப்பு நித்திய காலத்திற்குமாக இருக்கும் என்பதை மறந்து விடாதே!

தேவன் நம்மை ஒருபோதும் கைவிடாத பரிசுத்த வாழ்க்கை வாழ தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

**E.Z.S. ராஜ நாயகம்**

## புதிய வாய்ப்பு

*திருமறை ஆசான் மாத இதழில் திங்கள் தோறும் வெளிவந்த, சகோ.J.C.சோட் (Bro.J.C.CHOATE) அவர்கள் எளிய நடையில் எழுதிய 26 கட்டுரைகளை தொகுத்து **"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.*

*சத்திய விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக்கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்பவேண்டிய தொகை ரூ.20/- மாத்திரமே.*

*முகவரி : தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*
*தபால் பெட்டி எண்.27, காங்கேயம் - 638 701.*

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA** வளாகம், ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)

(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.

ஜோலார்பேட்டை ஜங்ஷனிலிருந்து, சுமார் 25 கி.மீ.

திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ)

**நாள் : மே மாதம் : 2,3,4 - 2001 (புதன் - வெள்ளி)**

### சிறப்பம்சங்கள்

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.

★ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தரும் தேவ தாசர்கள்

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.

★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்பவெப்பம்

★ குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை.

★ பெண்களுக்கு தனி இட வசதி உண்டு.

**உணவும் தங்குமிடமும் இலவசம்**
**பதிவுக் கட்டணம் ரூ.75.00 மட்டுமே**

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை
195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
Ph : 04257 - 20030
e-mail : kangayam cofc @ eth.net

குறிப்பு : சுமார் 200 பேர் மாத்திரம் தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

# புதிய ஏற்பாட்டு ஐக்கியம்

மார்க்கரீதியான உலகம் பிளவு பட்டு காணுகிறது.கத்தோலிக்கம், புராட்டஸ்டன்ட், பிற பிரிவுக் கூட்டங்கள், பிரிவுகள், மற்றும் வித்தியாசப்பட்ட குழுக்கள் ஆகியவை, பிளவுபட்டுக் காணுகின்றன. இவர்களெல்லாரும் ஒரே கர்த்தரைத்தான் ஆராதிப்பதாக கூறுவர். அதே வேளையில், தங்களிடம் ஏதோ ஒரு குறை இருப்பதை அவர்கள் உணருகின்றனர். அதன் விளைவாகத்தான் ஐக்கியத்தைக் கொண்டுவர அவர்களில் சிலர் பிரயாசப்பட்டனர். மகா நாடுகள், கூட்டங்கள், கருத்தரங்கம், போன்றவற்றை அந்தந்த குழுத் தலைவர்கள் ஒன்றாகக் கூடி பொதுவானதொரு ஐக்கியத்திற்கு வழிகாண முற்படுகின்றனர். இவர்களில் இந்த முயற்சிகளை நாம் பாராட்டினாலும், இந்த கூட்டத்தினர் தங்கள் தங்கள் கொள்கை புத்தகங்கள், விநோதமான நம்பிக்கைகள், தங்களை அழைத்துக் கொள்ளும் பெயர்கள், உபதேசக் கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றை இவர்கள் மாற்றி, வேதத்தின் போதனைகளுக்கு மாத்திரம் திரும்பாத வரை இவர்களின் அடிமனதில் காணும் ஐக்கியத்தை இவர்களால் எதிர்பார்க்க இயலாது. இதை ஒரு முறை அவர்கள் செயல்படும் போதுதான் உண்மை ஐக்கியத்தை இவர்கள் காண இயலும்.

பிரிவினைகளையும், குழப்பங்களையும் தேவன் வெறுக்கிறார். வசனம் தெளிவாக இதைக் காட்டுகிறது. உதாரணமாக, கொரிந்து பட்டணத்தில் இருந்த கர்த்தருடைய சபையிலே பிரிவினைகள் உண்டானபோது,பவுல் உடனடியாக அவர்களைக் கடிந்து கொண்டார். வாசகத்தைக் கவனியுங்கள். ''சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்கு வாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது.உங்களில் சிலர், நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. இதற்காகத் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல் இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானம் கொடுத்தேனோ இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை. சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாத படிக்கு,சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்''. (1.கொரி. 1:10-17).

தொடர்ந்து வரும் வசனங்களில் பவுல், ஐக்கியத்தை வேண்டுவதை நீங்கள் காணக்கூடும். பிரிவினைக் குறித்து அணுகுமுறையில் கேள்விகளை கேட்டு அதன் வாயிலாக அவர்களது பெலவீனத்தை (அல்லது தவறை) அவர் உணர்த்துவதைக் காணலாம். அவர்கேட்ட முதல் கேள்வி, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? ''அவர்களுக்கு கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை என்பது நன்றாக தெரிந்தே இருந்தது. அவரது இரண்டாவது கேள்வி, ''பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டார்? இல்லை. கிறிஸ்துதான் தங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இறுதியாக பவுல்,''...பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பண்ணப்பட்டீர்கள்?'' என்று கேட்டார். இல்லை, அவர்கள் எந்த மனுஷனுடைய நாமத்திலும் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தனர். எனவே அவர்கள் எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கே வருகிறோம். எவ்வளவு எளிமையானது.

தன் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதாக ஒருவரும் கூறாதபடிக்கு, பவுல் ஒரு சிலரை மாத்திரம் ஞானஸ்நானப்படுத்தியதைக் குறித்து சந்தோஷப்படுகிற இதே வேளையில், கொரிந்துவில் இப்படிப்பட்ட (பிரிவினை) பிரச்சனையிருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இதை மனதில் கொண்டுதான், சுவிசேஷத்தை பிரசங்கிக்கவே தான் வந்ததாகவும், ஞானஸ்நானம் பண்ணுவதற்கல்ல என்பதையும் குறிப்பிடுகிறார். இன்னொரு வார்த்தையில், சொன்னால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற நோக்கத்திற்காகத் தான் வந்ததாகக் குறிப்பிடுகிறார். ஜனங்கள் அவரது பிரசங்கத்தின் விளைவால் ஞானஸ்நானம் கொடுக்காமல், மற்றவர்களையே ஞானஸ்நானம் கொடுக்கச் செய்தார். ஞானஸ் நானத்திற்கு எதிராக பவுல் பிரசங்கிக்கவில்லை. அப்படியானால், அவர் யாருக்குமே ஞானஸ்நானம் கொடுத்திருக்கமாட்டார். மாறாக், சூழ்நிலைக்கேற்ப அவர் ஒரு சிலருக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுத்தமைக்கு மகிழ்வடைந்தார்.

ரோமர் 16:17,18-ல் பவுல்,'' அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்''. அப்போஸ்தலர் சொல்லுவதென்னவெனில்,பிரிவினைகளை உண்டாக்குகிற வர்களை விட்டு விலகியிருக்க வேண்டும் என்பதே, ஏன்? ஏனெனில் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல், ஜனங்களின் இருதயங்களை தங்களின் நயவசனிப்பினால் வஞ்சிக்கின்றனர். மறுபுறத்தில் அவர்களை அவர் பாராட்டவோ, புகழவோ, அல்லது அவர்களது செய்கைகளை பொறுத்துக் கொள்ளவோ செய்யவில்லை. பிற வசனங்களும் இதை உறுதிப் படுத்தியே பேசுகின்றன.எனவே தங்களைத் தேவனைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லுபவர்களெல்லாம் தேவனைச் சார்ந்தவர்கள் அல்லர், வேதத்தை போதிக்கிறோம் என்று கூறுவோரெல்லாம்

வேதத்தை முறையாகப் போதிப் போரல்லர், தங்களுக்கே எச்சரிக்கையை எடுத்துக் கொள்ளாமல், மற்றவர்களை வஞ்சிக்க தீர்மானித்து செயல்படுகின்றனர்.

இயேசுவும் ஒற்றுமைக்காக, முழுமைக்காக, நிறைவுக்காக ஜெபித்தார். அவர் சொல்லுவதைக் கேளுங்கள். ''நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்''.(யோவான் 17:20,21). இங்கு கிறிஸ்து அப்போஸ்தலருக்காக ஜெபிப்பதோடல்லாமல், அவர்களுடைய பிரசங்கத்தினால் அவர்களை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறார். பிறகு அவர்களெல் லாரையும் குறித்து குறிப்பிடுகையில், ''அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்'' என்று கேட்கிறார். எந்த அளவுக்கு? அவரும் அவருடைய பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல என்று குறிப்பிடுகிறார். இதுவே உண்மையான ஐக்கியம்.

பவுலின் எழுத்துக்களுக்குத் திரும்புவோமானால், ஐக்கியத்திற்கு ஓர் அடிப்படையான கருத்துக்களை அவர் கூறுகிறார். ''ஆதலால் கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மை யும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையை க் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்'' (எபே.4:1-6) இவைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை? ஒன்று மாத்திரமே, எத்தனை ஒன்று? '' ஒரே'' ஒன்று. உலகமெங்கிலும் காணும் பல (பிராந்திய) சபைகளையும் இணைத்து ஒரே சபை (சரீரம்) என்று கூறப்படுகிறது என்றால், அதுபோலவே தேவனையும், கிறிஸ்துவையும் குறித்த ஒற்றுமையை குறிப்பிடுகிறது எனலாம் எனது நண்பர்களே, தேவன் நமக்கு ஒரே புத்தகமாகிய வேதத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் அதை வாசித்து, விசுவாசித்து, அதன் போதனைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போமாகில், பிறகு நாம் எல்லாரும் ஒரே உபதேசங்களுக்கு கீழ்ப்படிவோம். ஒரே சபையில் சேர்க்கப்பட்டிருப்போம். ஒரே பெயரைத் தரித்துக் கொள்ளுவோம். ஒரே மாதிரி ஆராதனையைச் செய்வோம். ஒரே காரியத்தை பிரசங்கிப்போம். வேதாகமம் நம்மை பிரித்து வைக்காமல், நம்மை ஒன்று சேர்க்கும். நாம் பிரிந்திருக்க வேண்டுமென்று கிறிஸ்து ஜெபிக்காமல்,ஒன்றாயிருக்கும்படிக்கே ஜெபித்தார். தேவனுடைய சித்தத்தை நாம் செயல்படுத்தும்போது மட்டுமே ஒன்றுபட்டிருப்போம்.

**J.C.Choate** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# ஆராதனையில் பெண்கள் "அந்நிய பாஷையில்" பேசலாமா?

உலகத்தில் அதிவேகமாய் வளர்ந்து கொண்டிருக்கிற மத இயக்கங்களில், " பெந்தெகொஸ்தே" என்ற இயக்கமும் ஒன்று. பெந்தெகொஸ்தே என்ற பொதுவான பெயரில் அநேக சபைகள் உண்டு: தி அசெம்பிளிஸ் ஆப் காட், தி சர்ச் ஆப் காட், தி பெந்தெகொஸ்தே சர்ச்.போன்றவைகள் ஏராளமுண்டு. இன்னும் மற்ற மத ஸ்தாபனங்களின், பிராந்திய சபைகள், பெந்தெகொஸ்தே போதனையாகிய, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அற்புதங்கள், அந்நியபாஷை பேசுதல், மற்றும் பரிசுத்த ஆவியானவர் அற்புதமான விதத்தில் செயல்படுதல் ஆகியவைகளை தங்களோடு இணைத்துக்கொண்டார்கள்.

இந்த சபைகள், பரிசுத்த ஆவி, பெந்தெகொஸ்தே, தேவனுடைய சபை போன்ற இன்னும் அநேக வேதாகம வார்த்தைகளை வலியுறுத்தி சொல்லுவதால் - அநேகர் இவர்களுடைய வரலாறு, உபதேசம், நடத்தை ஆகியவற்றை தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிடாமல் அவர்கள் கூறுவதுபோல் இது வேதாகமச் சபை என்று ஏற்றுக்கொள்கிறார்கள்.

❋ இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து ஏறக்குறைய ஒருவாரத்தில், பெந்தெகொஸ்தே என்னும் நாளில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்ட போது கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது என்று புதிய ஏற்பாட்டில் நாம் வாசிப்பது உண்மைதான். இந்த குழுக்கள் இந்த பெயர்களை தங்களுடையதாய் ஆக்கிக் கொண்டு ஆதாயம் தேடுவதால், சத்தியத்தை, உண்மையாய், நேர்மையாய் தேடுகிறவர்களுக்கு மத்தியில் இது பெரும் குழப்பத்தை விளைவிக்கிறது.

பிரச்சினை என்னவென்றால், இந்த சபைகள், முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவினால் தொடங்கப்பட்டதல்ல. அநேக பிரசங்கிமார்களும், முன்னாள் மிஷனரிகளும் சேர்ந்து 1914-ல் அமெரிக்க ஐக்கிய தேசத்திலுள்ள அர்கான்சாஸ் என்கிற மாநிலத்திலுள்ள ஹாட் ஸ்பிரிங்க்ஸ் என்கிற இடத்தில் "தி அசெம்பிளிஸ் ஆப் காட்" என்ற சபை ஆரம்பிக்கப்பட்டது. " தி ஹோலினஸ் சபை" என்றும் முதலில் பெயர் கொண்ட " சர்ச் ஆப் காட்" சபை, ரிச்சர்டு ஜி.ஸ்பர்லிங் என்பவரால் 1902-ல் டென்னிசியிலுள்ள, மோன்றோ கவுண்டி என்ற இடத்தில் தொடங்கப் பட்டது. 1943-ல் தன் தகப்பனிடத்திலிருந்து தலைமைத்துவத்தை பெற்ற டாம்லின்சன் என்பவர் இச்சபையை இரண்டாக பிளவுபடச் செய்தார். இரண்டு கிளைகளுடன் டென்னிசியிலுள்ள கிளைவ்லேண்டு என்கிற இடத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. தெற்கு கரோனியாவிலுள்ள, ஆண்டர்கன் என்கிற இடத்தில் 1898-ல் " தி பெந்தெகொஸ்தே ஹோலினஸ் சர்ச் " ஆரம்பிக்கப்பட்டது. குழுக்களாக இயங்குகிற, தனிப்பட்டு இயங்குகிற பெந்தெகொஸ்தே சபைகளை

போன்று எண்ணிலடங்காதவைகள் இன்று உலகத்தில் இருக்கிறது. இயேசுவால் ஆரம்பிக்கப்பட்ட உண்மை சபையாக இவைகளில்லையென்ற காரணத்தால், இந்த குழுவில் இடம்பெற்றிருக்கும் ஒன்று கூட முதல் நூற்றாண்டில் ஆரம்பிக்கப் பட்டதல்ல.

❋ சபையின் பிறந்த நாள் பெந்தெகொஸ்தே தினமாக இருந்த போதிலும் தன் ஆவிக்குரிய குடும்பத்திற்கு இதன் பெயரிட்டு, இந்த யூதப்பண்டிகையை தேவன் மகிமைப்படுத்தும்படி எண்ணம் கொள்ளவில்லை. மாறாக எபே.3:14,15 நம்முடைய முழங்கால்களை ''பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுக் குடும்பத்திற்கும் நாமகாரணராகிய நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவைநோக்கி'' முடக்க வேண்டுமென்கிறது. '' அவராலே அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் (கிறிஸ்துவின் நாமமேயல்லாமல்) வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை'' என்று அப்போஸ்தலர் 4:12 கூறுகிறது. நாம் கிறிஸ்துவுக்கு திருமணம் செய்யப்பட்டிருக்கிறோம் என்று பவுல் ரோம சபைக்கு எழுதுகிறார். (ரோமர்.7:4) மற்றும் ரோமர் 16:16-ல் '' ...கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்'' என்கிறார். எபே.5:23-32-ல் கணவனுக்கும் - மனைவிக்கும் ; கிறிஸ்துவுக்கும் - சபைக்கும் மத்தியில் ஒரு அழகான ஒப்புமை இடம்பெற்றிருக்கிறது.

ஒட்டுமொத்த சபையாகவும், தனிப்பட்ட கிறிஸ்தவனாகவும் நாம் மணவாளனாகிய கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொள்ளவேண்டும் என்றே இவ்வசனங்கள் நமக்குக் காட்டுகிறது. இப்பொழுது சொல்லுங்கள். வேதாகமத்தில் சபைக்கு ''பெந்தெகொஸ்தே'' என்று பெயரிட்டு, தேவன் யூதப் பண்டிகை நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறாரா? இந்த மக்கள் எவ்வளவு பெரிய தவறை செய்திருக்கிறார்கள் - ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களோடு இருந்ததுபோல் இவர்களோடும் இருப்பாரானால், புதிய ஏற்பாட்டில் தெளிவாய் அவர் எழுதிக்கொடுத்தவைகளுக்கு விரோதமான தவறுகள் செய்யும்படியாக ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்.

பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் முதன்மையானவர் போலவும், அற்புத அடையாளங்களை செய்யவும், மாம்ச சரீரத்தை குணமாக்குவதுமே தேவனுக்கு முதன்மையானது போலவும், இந்த மக்கள் பரிசுத்த ஆவியானவரின் அற்புத வழிநடத்துதல் மீது அதிகமாய் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டை நாம் கவனமாக, திறந்த மனதோடு படித்துப் பார்த்தால், புதிய ஏற்பாடு எழுதிமுடிக்கப்படாத அந்த காலத்தில், போதிக்கப்படும் வார்த்தைகள் உறுதிப்படுத்தப்படவும், அவரால் ஏவப்பட்டு புதிய ஏற்பாடு எழுதப்படவுமே பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார் என்பதைக் காணமுடியும். அந்த சமயத்தில் கூட அவர், '' கிறிஸ்துவை பிரசங்கிக்கவே'' ஏவினாரேயொழிய, அவரைக்குறித்தல்ல, செய்தியளிப்பவரை தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று நிரூபிக்கும் படியானதாகவே, சரீர சுகமளித்தல் இருந்தது; அற்புதங்கள் செய்வது

பிரசங்கத்தின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை.

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு '' இயேசுவை'' பிரசங்கித்தான்.(அப்.2) பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று '' தேவனுடைய இராஜ்யத்தையும், இயேசுவையும்'' குறித்துப் பிரசங்கித்தான். (அப்.8:12), எத்தியோப்பிய மந்திரிக்கு அவன் '' இயேசுவை'' பிரசங்கித்தான். (அப்.8:35) பவுல் மனமாற்றமடைந்த உடனே ''இயேசுவை'' பிரசங்கிக்கத் தொடங்கினான்.(அப்.9:20)இன்று பெந்தெகொஸ்தே பிரசங்கியார்கள் செய்வதுபோல், பரிசுத்த ஆவியானவர் குறித்து இந்த வசனப்பகுதியிலும் அல்லது எந்நேரத்திலும் அன்றைய பிரசங்கியார்கள் பிரசங்கிக்கவில்லை.

சுவிசேஷ நூல்களுக்குப் பிறகு, முக்கியமான அப்போஸ்தலர் புத்தகத்தில் மாத்திரமே தனியான அற்புதங்கள் இடம்பெற்றிருக்கிறது. நாம் அப்போஸ்தலர் புத்தகத்திற்குச் சென்று ஒவ்வொரு அற்புதமாக குறிப்பிட்டுப் பார்ப்பது ஆர்வமூட்டக்கூடியதாக இருக்கும். இந்தப் புத்தகத்தில் வெகு குறைவான அற்புதங்களே சொல்லப்பட்டிருப்பதையும், அது மிகக்குறைந்த முக்கியத்துவமே பெற்றிருப்பதையும், இன்றைய சபைகளில் அற்புதங்களுக்கு கொடுக்கப்படும் அதி முக்கியத்துவத்தையும் கண்டு, இப்புத்தகத்தை வாசிப்போரில் அநேகர் ஆச்சரியப்படுவார்கள். நிருபங்களில் I.கொரிந்தியர், கலாத்தியர், எபிரேயர் ஆகியவைகளில் மாத்திரமே அற்புதத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. ஏன்? புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டுக்கொண்டிருப்பதால், அற்புதங்களின் தேவை குறைந்து கொண்டே வந்தது. மாற்கு 16:20-ல் சொல்லப்பட்டது போல், வசனங்கள் எழுதப்பட்டது, அற்புதங்களால் உறுதிப்படுத்தப்பட்டவுடன், அற்புதங்களின் காலம் முடிவுக்கு வந்தது.

...தொடரும்

**B. B. சோட்** **R. R. நாயகம்.**

## வானம் திறக்கப்பட்ட சம்பவங்கள்

*1. இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திறக்கப்பட்டது (மத்.3:16)*
*2. ஸ்தேவானின் மரணத்தின் போது திறக்கப்பட்டது (அப்.7:56)*
*3. பேதுரு யோப்பா பட்டணத்தில் தரிசனங்காணும் போது திறக்கப்பட்டது.(அப்.10:11)*
*4. பவுல் கூறிய மனிதன் மூன்றாம் வானம் வரை எடுத்துக் கொள்ளப்பட்டபோது திறக்கப்பட்டது(2.கொரி.12:2)*

வாலிபர் பகுதி

# விண்ணகம் எட்டட்டும்

**எ**கிப்தின் அடிமைத்தன நுகம் இஸ்ரவேல் ஜனங்களை மிகவும் நெருக்கியதால், அதரிசனமான அதிசய தேவனுடைய சமூகத்திற்கு நேராய் விண் எட்டும்படி விண்ணப்பங்களை செய்தபோது, கபடமில்லாத உதடுகளிலிருந்து பிறக்கும் விண்ணப்பத்திற்கு செவிசாய்க்கும் தேவன் இவர்களை, நெற்கதிர் மணிகள் நிறைந்திருப்பதால் பூமி தனக்குத் தாரை வார்த்த செழுமைக்கு நன்றி கூறும் வண்ணம் தலை குனிந்து வணங்கி, அறுவடைக்கு பயிர்கள் காத்திருக்கும் சமயத்தில் கரைபுரண்டோடும் யோர்தான் மட்டும் கழுகுகளின் செட்டைகளில் ஏந்தி சுமந்து வந்து யோர்தானைக் குவித்து, இஸ்ரவேலர்களை கடந்து போகப்பண்ணின சமயத்தில், கோத்திரத்திற்கொரு கல் என எடுத்துவந்த சம்பவத்திலிருந்து, முதல் கல்லாக **''அன்பு''** என்னும் கல்லை நாம் சென்ற மாதம் அளந்து பார்த்தோம்.

அறுபத்தி ஆறு வரப்புகள் அறுத்து, வித்தியாசமான பயிர்களை விளையப் பெற்றிருக்கும் வேதாகமத்தில், பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு, சாலொமோனால் வரப்பறுக்கப்பட்டு, ஞானபயிர்களைக் கொண்ட நீதிமொழி களில், ***''... செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்''*** (நீதி.15:8) என்று ஞானி இயம்புகிறார். தீர்க்கனான ஓசியா, ***''கர்த்தருடைய வழிகள் செம்மையா னவைகள்; நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்''*** (ஓசியா 14:9) என்று விளம்புகிறார். கர்த்தருடைய வழிகளில் நடந்து அவரிடத்தில் ஜெபிப் போமானால் அது அவருக்குப் பிரியமாயிருக்கும் என்று வாலிபர்களாகிய நாம் காண வேண்டும் என்பதற்காய், **'' ஜெபம்''** என்கிற கல்லை உங்கள் முன் இம்மாதம் நிறுத்துகிறேன்.

## ஜெபம் என்னும் கல்

''ஜெபம்'', இது வார்த்தை அலங்காரத்தால் விவரிக்க முடியாத மிகப்பெரிய சிலாக்கியமாகும். **மண்ணான மனிதன் தன் மன்றாட்டுகளை மகிமை நிறைந்த மன்னவனாகிய மகாதேவனிடம் மனந்திறந்து மொழிவது தான் ஜெபம்.** மகத்துவ தேவன் தங்களுக்கில்லாதவர்களாக, நம்பிக்கையற்றவர்களாய் இவ்வையகத்தில் சஞ்சரித்து வந்த நம்மை, தம்முடைய ஏக சுதன் மூலம் ''அப்பா பிதாவே'' என்றழைக்கும்படியான புத்திர சுவிகாரத்தின் ஆவியை நமக்குத் தந்திருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு நிருபம் வடிக்கையில், *''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்''* (1.தெச.5:17) என்று புத்தி சொல்லி எழுதுகிறார். வாலிபர்களே! ''இடைவிடாமல்'' என்ற சொல்லை கேட்டவுடன் அது எப்படி முடியும்? அப்படியானால், வேறு எந்த அலுவலும் நம்மால் செய்ய

முடியாதே என்று நீங்கள் கேட்கலாம், ஆனால் இடைவிடாமல் என்ற பதத்திற்கு அர்த்தம் காண ஒரு பழைய ஏற்பாட்டுக் கருத்தை உங்கள் முன் வைக்கிறேன், சீர்தூக்கி சிந்தித்துப் பாருங்கள் ''பலிபீடத்தின்மேல்; நீ பலியிடவேண்டியது என்னவெனில்; ''இடைவிடாமல்'' ஒவ்வொரு நாளிலும் ஒரு வயதான, இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட வேண்டும், ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும், மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலும் பலியிடுவாயாக'' என்று யாத்.29:38,39-ல் வாசிக்கிறோம்.

வாலிபர்களே! தேவன் தன் தாசனாகிய மோசேயிடம் கூறும்போது இடைவிடாமல் ஒவ்வொருநாளிலும் பலிசெலுத்து என்கிறார்.ஒரு நாளில் காலையிலும், மாலையிலும் பலியிட்டால் இது ***''இடைவிடாமல்''*** ஒரு தினத்திற்கு நீ செலுத்திய பலி என்றாகும் என்கிறார். இதிலிருந்து ***''இடைவிடாமல்''*** என்றால், பதருக்கும், பயிருக்கும் வித்தியாசம் காட்ட விரைந்தோடி வரும் கதிரவன் தோன்றும் காலையிலும்,கதிரவனின் கதிர்பட்டு வெப்பத்தால் வாடிக்கொண்டிருககும் பூமிக்கு குளிர்ச்சி தர, நிலவு வரும் மாலையிலும், குறைந்தது இவ்விரண்டு வேலையிலும் நாம் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என்று காண்கிறோம். அதுவும் நாம் கர்த்தருடைய நீதியான அவருடைய வசனத்தின்படி நடந்து ஊக்கமாய் ஜெபித்தால் அது அதிக பெலனுள்ளதாயிருக்கும் என்பதை வாலிபர்களாகிய நாம் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

## நாம் எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்

இவ்வுலகத்திலே பிறந்த நாம், நமக்கு நிர்ணயிக்கப்பட்ட நாள் வரும் வரைக்கும் ஜீவிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. நாம் அகிலத்தில் வாழும் ஒவ்வொரு நாழிகையிலும் தேவை உடையவர்களாகவே இருக்கிறோம். உயிர் வாழ உணவும், யாக்கை மறைக்க உடுக்கையும், சூரியக் கதிர்பட்டு துவண்டு விடாமலிருக்க மற்றும் மழை மாரிக்கு ஒதுங்க நிழலும் மனிதனுக்கு அடிப்படை தேவையாயிருக்கிறது. நாம், நமது அடிப்படை தேவைக்காக ஜெபிப்பதில் எந்தத் தவறுமில்லை. ஆனால் வாலிபர்களாகிய நீங்கள் அறியவேண்டியது, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடினால், இவைகளை உங்களுக்குக் கூடவே கொடுப்பேன் என்று அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். (மத்.6:11,33).

வாலிபர்களாகிய நீங்கள், நமது தேவனின் அறிவுக்கு தெரியாமல், ஒரு அணுவும் அசையாதென்றும், அவருடைய சித்தமில்லாமல் ஒரு சிறு சத்தமும் எழும்பாதென்றும் தெரிந்து, விண்மண்டலங்களில் அவருடைய சித்தம், நித்தமும் நடப்பது போல் புவியில் வாழும் நம்மிடையேயும் அவருடைய சித்தம் மாத்திரம் நிறைவேற ஜெபிக்கவேண்டும். (மத்.6 :10; 26 :59), ஒருமுறை தேவன் ஏசாயா தீர்க்கனைக் கொண்டு, எசேக்கியா ராஜாவிடம், '' வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் மரித்துப்போவீர்'' (2.இராஜா.20:1) என்றார். ஆனால் எசேக்கியா மிகவும் அழுது கெஞ்சி மன்றாடியதால், கர்த்தர் அவனுக்கு 15 வருடத்தைக் கூட்டிக்கொடுத்தார். மனாசே என்கிற மகனையும் கொடுத்தார். ஆனால் கூட்டிக் கொடுக்கப்பட்ட காலத்தில் எசேக்கியா பாபிலோனிலிருந்து

வந்தவர்களிடம். ஆலயத்திலும், அரண்மனையிலும் இருந்த எல்லா பொருளையும் காட்டியதால், அவை எல்லாம் பாபிலோனுக்கு கொண்டுபோகப்படும் என்று கர்த்தரிடத்திலிருந்து சாபத்தை பெற்றுக்கொண்டான். அதுமாத்திரமல்ல, அவனுக்கு கூட்டிக்கொடுக்கப்பட்ட நாளிலே பிறந்த மனாசே மிகவும் துன்மார்க்கனாக ஜீவித்து வந்தான்.

வாலிபர்களே! தேவன் சர்வ ஞானம் உடையவர், நமக்கு எது நல்லது என்று நிறைமதி கொண்ட அவருக்கு நன்றாகவே தெரியும். நாம் அவருடைய சித்தத்திற்கு மாறாக ஜெபிக்கும் போது நாம் அவரை விட ஞானி என்று காட்டிக்கொள்கிறோம். அவர் சித்தத்திற்கு மாறாக நாம் ஜெபிக்கும் போது கூட, சிலவேளைகளில் நமது ஜெபத்தைக் கேட்டு மறு உத்தரவு அருளுவார். ஆனால் எசேக்கியாவின் நிலைமை தான் நமக்கும் கிடைக்கும் . அன்பானவர்களே! நமது ஆண்டவர் நம்மை, பகைவர்களுக்காகவும் ஜெபிக்கச் சொன்னார். (மத்.5:44) அப்படிச் சொன்ன அவர் தன்னை சிலுவையில் அடித்தவர்களுக்காக பிதாவிடம் மன்றாடினாரே அதைப்போலவே நாமும் நம்முடைய பகைஞர்களுக்காக ஜெபிக்கிறவர்களாக இருந்திடல் வேண்டும்.

தேவனுடைய வசனத்தின்படி ஜீவிக்க நாம் எத்தனிக்கையில், நம்மை சோதனையில் அகப்பட செய்யவேண்டும் என்று ஏதேன் தோட்டத்தில் ஏவாளை ஏமாற்ற பயன்படுத்திய அதே அக்கினியாஸ்திரங்களை எத்தனாகிய பிசாசு ஏவிவிடுவான், அப்படி அவன் எய்யும் ஒவ்வொரு அம்புக்கும் நாம் தப்பிக்கவேண்டுமானால், சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணவேண்டும். (மத்.26:41). வாலிபர்களே! இந்த இளம் பிராயத்தில் சாத்தான் நமக்கு எதிராக சதிவலையை எளிதாய் விரித்து அதில் நம்மை அகப்பட வைக்கமுடியும்.அதுவும் குறிப்பாக இவ்வயதில் நம்மை கவர்ந்திழுக்க அவன் விடாமுயற்சியாய் ஈடுபடுவான். இப்பிராயத்திலேயே நாம் தவறுகள் செய்யப்பழகி அதற்கு அடிமைகள் என்ற நிலைமைக்குத் தள்ளப்படுவோமானால், பின்பு மீண்டு வருவதென்பது சிங்கத்தின்பிடியில் சிக்கின புள்ளிமான் காயமின்றி தப்பினதுபோல் இருக்கும். ஆகவே வாலிபர்களே! சோதனைக்குட்படாமல் தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும்படியாக அவரிடம் நாம் வேண்டுதல் செய்யவேண்டும்.

யோவான் தன்னுடைய நிருபத்தில் '' அவருடைய கற்பனையைக் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம். நாம்... ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டு மென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது'' (1.யோவ.3:22,23) என்கிறார். கற்பனையை கைக் கொண்டு நடந்தால் அவர் நம்முடைய ஜெபத்தை பிரியமாய் கேட்பார். கற்பனை எது என்ற கேள்விக்கு ''அன்பு'' என்ற விடையை யோவான் தருகிறார். அதாவது ''அன்பு'' என்ற முதல் கல் நம்மிடையே இருக்குமானால், ''ஜெபம்'' என்கிற இரண்டாவது கல் நமக்கு எளிதாய் கிட்டும் .ஆகவே வாலிபர்களாகிய உங்களது **விசுவாசமுள்ள, ஊக்கமான ஜெபம் விண்ணகம் எட்டட்டும், பரலோகத்தின் கதவுகளைத் தட்டட்டும், தேவனின் செவிக்குக் கிட்டட்டும், அதனால் உங்களுக்கு ஆசீர்வாத மழை கொட்டட்டும். ஆமென்! அப்படியே ஆகட்டும்!**

ஜே. பிக்கின்ஸ்.

# I. இராஜாக்கள் ஒரு கண்ணோட்டம்

**1. காலம்** : ஏறக்குறைய கி.மு. 562-536 வருடங்களுக்குள்ளாக எழுதப்பட்டிருக்கலாம்.

**2. ஆசிரியர்** : எரேமியாவாக இருக்கலாம் என்று யூதர்களால் நம்பப்படுகிறது.

**3. இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் ஏறக்குறைய 400 வருட, எபிரேய வரலாற்றுச் சம்பவங்களை தனக்குள்ளடக்கியிருக்கிறது.

ஆ) இந்நூல் ஒரு வரலாற்று நூலாக மாத்திரமிராமல், தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களை அவர் ஆசீர்வதிக்கிறார் என்றும், அவருக்குக் கீழ்ப்படியாதவர்களை தண்டிக்கிறார் என்றும் விளக்குகிறதாக அமைந்துள்ளது.

இ) சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிளவு பட்டது (கி.மு.922).

ஈ) இந்நூல் தாவீது ராஜாவின் கடைசி நாட்களில் ஆரம்பித்து, யூத ராஜ்யத்தின் எட்டாவது ராஜாவாகிய அகசியாவின் நாட்களோடு முடிவடைகிறது.

உ) செப்து ஜின்ட் என்னும் கிரேக்கமொழியாக்க வேதாகமத்தில் 1,2 சாமுவேல் மற்றும் 1, 2 இராஜாக்களின் புத்தகங்கள், ஒரே புத்தகமாக, ராஜ்ஜியங்களின் புத்தகமென்று அழைக்கப்படுகிறது.

ஊ) சாலொமோன் ராஜா பல பெண்களை திருமணம் செய்தது இஸ்ரவேலின் முடிவுக்கு ஆரம்பமாக அமைந்தது.

**4. இந்நூலின் செய்தி:**

அ) கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்வதிலே தான் இஸ்ரவேலுடைய உயர்வும், தாழ்வும் அமைந்திருக்கிறது.

ஆ) இராஜாக்களுடைய ஆளுகைகள், அவர்களுடைய அரசியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டு விவரிக்கப்படாமல், அவர்களின் ஆவிக்குரிய வாழ்வினை அடிப்படையாகக் கொண்டே விவரிக்கப்பட்டுள்ளது.

# வேதாகமக் கேள்வி - பதில்

**கேள்வி** ***I.யோவான்.5:16,17ல், மரணத்திற்கேதுவான பாவம் என்றால் என்ன?***

**பதில்** கிறிஸ்தவர்களான நாம் அறிக்கையிட்டு, விட்டுவிடுகிற எல்லாப் பாவங்களையும் தேவன் மன்னிக்கிறார் (1.யோவான் 1:7-10). மரணத்திற்கேதுவான பாவம் என்பது, நாம் அறிக்கையிடாமலும், விட்டுவிடாமலும் இருக்கிற பாவமே ஆகும்.

**கேள்வி** ***பெந்தெகொஸ்தே என்பது யூதர்களின் பண்டிகையா அல்லது பரிசுத்த ஆவி அருளப்படுவதின் நோக்கத்திற்காக கிறிஸ்து ஆரம்பித்த பண்டிகையா?***

**பதில்** யூதர்களுக்கு வருடத்தில் ''மூன்று'' விசேஷித்த பண்டிகைகள் இருக்கிறது.அவை பஸ்காபண்டிகை, கூடாரப்பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை என்பதாகும். பெந்தெகொஸ்தே பண்டிகை, பஸ்கா பண்டிகைக்குப் பின் 50 நாள் கழித்து வாரத்தின் முதல் நாளிலே வரும். இப்பண்டிகைக்கு வேறு மூன்று பெயர்களுமுண்டு. அவைகள் அ). அறுப்பின் பண்டிகை (யாத்.23:16) ஆ). முதற்பலன்களின் பண்டிகை (லேவி.23:17) இ). வாரங்களின் பண்டிகை (யாத்.34:22). ஆகவே, பெந்தெகொஸ்தே பண்டிகை, கிறிஸ்து இவ்வுலகிற்கு வருவதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே அநுசரிக்கப்பட்டிருக்கிறது.

வானத்தின் கீழ் எங்குமிருக்கும் யூதர்கள் இந்நாளில் எருசலேமிற்கு தேவனை ஆராதிக்கும்படியாகக் கூடி வருவார்கள்.வேறு எந்த சமயத்திலிருக்கும் ஜனக்கூட்டத்தைக் காட்டிலும், இத்தருணத்தில் எருசலேமில் அதிகக் கூட்டமிருந் திருக்கும் என்று நம்பப்படுகிறது. ஆகவேதான், இந்நாள் இரட்சிக்கப்படுவதற்கு வல்லமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க ஏற்றநாளாக இருந்தது. அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் இடம்பெற்றிருக்கும் இந்த நாளைத்தான் தேவனுடைய இராஜ்ஜியம் ஏற்படப் போவதாக பழைய ஏற்பாட்டில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் சுட்டிக்காட்டுகிறது. (ஏசாயா.2, யோவேல்.2, தானியேல்.2) . இந்த தீர்க்கதரிசனம் அனைத்தும் கிறிஸ்துவின் சபையின் பிறந்த நாளாகிய பெந்தெ கொஸ்தே நாளில் சுமார் கி.பி. 33ல் நிறைவேறியது.

**கேள்வி** *இயேசு செய்ததுபோல், கிறிஸ்தவர்கள் மரித்தோருக்காக, துக்கப்பட்டு அழ கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறதே? ஏன்?*

**பதில்** இவ்வுலக வாழ்க்கையை விட்டு கடந்துசென்ற பிரியமானவர்களுக்காக அழவேண்டாம் என்று கிறிஸ்தவர்களுக்கு ஒரு போதும் தடை செய்யப் படவில்லை. தான் மிகவும் நேசித்த லாசருக்காக இயேசு கண்ணீர் விடுவது இயற்கையே (யோவான்.11:36). அதுபோலவே நாம் நடந்து கொள்வதும் எதார்த்தமானது தான். ஆனாலும், தங்களுக்குப் பிரியமானவர்கள் மரிக்கும்போது உலகத்தில் உள்ளவர்கள் துக்கம் கொண்டாடுவது போல நாம் செய்யக் கூடாது. ஏனெனில் உண்மையான கிறிஸ்தவர்களுக்கு வரப்போகிற நித்திய வாழ்விலே, மீண்டும் நாம் எல்லோரும் கூடி வாழ்வோம் என்கிற நம்பிக்கை இருக்கிறபடியால் தான் நாம் அப்படிச் செய்வதில்லை.

**கேள்வி** *நாம் தீர்ப்பு செய்யலாமா?*

**பதில்** அநீதியாய் நாம் தீர்ப்பு செய்யக்கூடாதென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம். (மத்.7:1-5) ஆனாலும் தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள் என்றும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். (யோவான்.7:24).

**கேள்வி** *எகிப்தில் புதிதாக வந்த ராஜா ஏன் யோசேப்பை "அறிந்திருக்க" வில்லை? (யாத்.1:8)*

**பதில்** "அறியாத" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தை பெரும்பாலும் " அங்கீகரிக்காத அல்லது ஏற்றுக்கொள்ளாத" என்ற பொருளைத் தரும். ஆகையால், யோசேப்பிற்கு பின் எழும்பிய ராஜா, யோசேப்பைக் குறித்து ஒன்றும் அறியவில்லை என்று நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. மாறாக, புதிதாக வந்த ராஜா தனக்கு முன்னிருந்த ராஜாவின் அதிகாரத்தின் கீழ் யோசேப்பு செய்த எந்த காரியத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்..."** எபி.11:6

**" ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்".** ரோமர் 10:17

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம்: பன்னிரெண்டு

வெளிப்படுத்துதல் நூலின் இரண்டாம் பகுதியை, இந்த 12-ம் அதிகாரம் தொடங்குவதோடல்லாமல், முற்றிலும் புதிய தலைப்பையும் இது அறிமுகம் செய்கிறது. பதினோராம் அதிகாரம் வரை, சபையின் பொதுவான துன்புறுத்துதல் பற்றியும், துன்மார்க்கருக்கு எதிரான அவருடைய நியாயத்தீர்ப்பு பற்றியும், தேவனுடைய நீதிமான்கள் முடிவிலே பாதுகாக்கப்படுதல் பற்றியும் பார்த்தோம். இந்நூலின் எஞ்சியிருக்கிற பகுதியிலும், இதே கருத்தை இன்னும் விளக்கமான முறையில் பார்க்கிறோம். சபைக்கெதிரான செயல்களின் விளக்கமும், சபையின் வெற்றி பற்றிய விளக்கமும் மற்றும்பரலோகம் நரகம் பற்றிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் அதிகாரம் மூன்று பேரை அறிமுகப்படுத்துகிறது. ஒரு ஸ்திரீ, சிவப்பான பெரிய வலுசர்ப்பம், ஒரு ஆண்பிள்ளை.

முதல் இரண்டு வசனங்கள், ''அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன. அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்'' என்று கூறுகிறது. அந்த ஸ்திரீ, பொல்லாங்கானதையல்ல, தேவனிடத்திலிருந்து வரும் ஒன்றை பிரதிநிதித்துவப்படுத்துகிறதென்று வெளிப்படையாகவே தெரிகிறது. முதலாவது சூரியனை அணிந்திருப்பதும், அவள் பாதங்களின் கீழே சந்திரன் இருப்பதும், ஒரு சரியான பொருளில் மகிமையும், வல்லமையும் நிறைந்ததாகும். (சங்.104 :2; மத்.13:43; 17:2,அப்.26:13,வெளி.1:16, 10:1;21:23;22:5 வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்) இரண்டாவதாக, 12 நட்சத்திரங்களுள்ள கிரீடமும் ஒரு நல்ல அடையாளமே. வெளிப்படுத்தல் நூலில், கிரீடமானது ஜெயத்தையும், அதிகாரத்தையும் விளக்குகிறது.(வெளி.1:16,20; 2:1,28;3:1; 8:10,11;9:1), அதுபோலவே, இந்நூலில், எண் 12-ம் (அல்லது அதன் மடங்கும்) தேவனுடைய ஜனங்களோடு (அவர்களுக்குக் கிடைக்கும் பலனோடு) தொடர்புடையதாக இருக்கிறது. (வெளி.7;4-8;14: 1-4;21:12-21;22:2) ஆகையால், பன்னிரெண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமாகனது தேவனிடத்திலிருந்து வந்ததாகவும் தேவனுடைய உண்மை ஊழியர்களோடு சம்பந்தமுடையதாகவும் மட்டும் இருக்க முடியும். மூன்றாவதாக, ஸ்திரீயினுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படி, அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. (12:4)பிறகு, அந்த ஸ்திரீயையும், அவளுடைய பிள்ளையையும் துன்பப்படுத்தினது (12:13,15,17). ஆனால், தேவன் ஸ்திரீயைக் காப்பாற்றினார். (12:6,13-16) அந்த ஸ்திரீயானவள், எந்த கேள்விக்குமிடமின்றி, மிகுந்த நல்லதுக்கும், தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதுமாயிருக்கிறதை, பிரதிநிதித்துவப் படுத்துகிறாள். அவள் எதை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடும் என்பதைக் கீழே பார்ப்போம்.

வசனம் 3,4-ல், ''அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக்கொம்புகளையும் தன் தலைகளின் மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது. அதன் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து, அவைகளை பூமியிலே விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது'' என்றுள்ளது. வலுசர்ப்பம், குழந்தையைப் பட்சித்துப்போட முயற்சித்ததென்பது, அது ஒரு பொல்லாததென்பதைக் காட்டுகிறது.வெளி.12:9, வலுசர்ப்பத்தை, ''பழைய பாம்பென்றும், பிசாசென்றும், சாத்தானென்றும்'' அடையாளப்படுத்துகிறது. வலுசர்ப்பமானது, ஏழு தலைகளையும், பத்துக்கொம்பு களையும் தன்னுடைய தலையின்மேல் ஏழு கிரீடங்களையும் கொண்டுள்ளதென்று சொல்லப்பட்டுள்ளதானது, அதன் முழுமையான துன்மார்க்கத்தையும், அதனால் செயல்படுத்த முடியும் வல்லமையையும் எடுத்துக்காட்டுகிறது. ஏழுதலைகளும், அவைகளின் கிரீடங்களும். "இந்த உலகத்தின் அதிபதி'' யாக சாத்தான் அதிகாரம் பெற்றிருக்கிறான் என்பதைச் சரியாக உருவகப்படுத்துகிறது. (யோபு.1:7;2:2; யோவா.12:31; 14:30;16:11;2கொரி.4:4;எபே.2:2;6:12;1.பேதுரு 5:8)கொம்புகள், வல்லமைக்கு அடையாளமாக உள்ளது. (தானியேல். 7-8,சகரியா.1:18-21;லூக்கா 1:69;வெளி.5:6;13:1,11;17:3-16) பத்துக் கொம்புகள் என்பது, தன்னுடைய ராஜ்ஜியத்தின்மீதும் துன்மார்க்கர் மீதும் அவனுக்கிருக்கும் அதிகாரத்தை உருவகப் படுத்துகிறது. (மத்.4:8,9;12:26; லூக்கா 4:5,6;11:18;அப்.26:18;2 தீமோ.2:26; எபி.2:14) அதின் வால், வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, பூமியில் விழத்தள்ளுகிறதென்பதும் அதன் வல்லமையை விளக்குகிறது.

இரண்டாம் வசனத்தில், அந்த ஸ்திரீ கர்ப்பவதியாயிருந்து, பிள்ளைபெற ஆயத்தமாயிருந்தாள். வசனம் 4-ல் குழந்தை பிறந்தவுடன் பட்சித்துப்போடும் படியாய், வலுசர்ப்பம் (சாத்தான்)அந்த ஸ்திரீக்கு முன்பாக, நின்றது.வசனம் 5-ல் '' சகல ஜாதிகளையும், இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண் பிள்ளையை அவள் பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத் தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த ஆண்பிள்ளை, கிறிஸ்துவைக் குறிக்கிறதாக இருக்கிறது. முதலாவதாக, அந்த ஆண்பிள்ளை, சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் என்று விவரிக்கப்படுகிறது'' (12:5) இது, வேத வசனங்களில், இயேசுக் கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்டிருக்கிற இடம் மற்றும் அதிகாரம் ஆகியவைகளின் சரியான விவரிப்பாக உள்ளது. (சங்.2:6-9;110:1-7, வெளி.2:26,27,19:11-16) மேலுமாக, மற்றொரு விவரிப்பாகிய, ''அந்தப் பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத் தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட தென்பது, இயேசு கிறிஸ்துவுக்கு இன்னும் பொருத்தமானதாக உள்ளது. (தானி.7:13,14; அப்.2:29-36; எபி.8:1; 12:2; வெளி.3:21) இந்த '' ஆண்பிள்ளை '' கிறிஸ்துவானால், அந்தப்பெண் யார்?

ரோமன் கத்தோலிக்கர்கள் அந்தப் பெண் கிறிஸ்துவின் பூமிக்குரிய தாயாகிய மரியாள் என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த அதிகாரத்தின் இப்பகுதி, இக்கருத்தை ஆதரிக்கவில்லை.முதலாவது, இந்த அதிகாரம் சொல்வதுபோல், மரியாள், தனிப்பட்ட முறையில், சாத்தானாலே துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டாள் என்பதற்கும் (12:13-17) அல்லது அவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் என்பதற்கும் எந்தச் சாட்சியும் இல்லை (12:6)இரண்டாவது, இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல், தெய்வீக பாதுகாப்பு மரியாளுக்குக் கொடுக்கப்பட்டதென்பதற்கும் சாட்சியில்லை. (12:6,14-16) மூன்றாவதாக, அந்த ஸ்திரீயின் ''சந்ததியார்'' தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுக் கிறிஸ்துவைக் குறித்து சாட்சியை உடையவர்களாயிருப்பார்களென்று சொல்லப்பட்டுள்ளது'' (12:17) கிறிஸ்தவர்கள் தான். அந்த ஸ்திரீயினுடைய சந்ததியார். மரியாள், சரீரப்பிரகாரமாகவோ அல்லது ஆவியின் ரீதியிலோ, கிறிஸ்தவர்களுக்குத் தாயல்ல.

சிலர், அந்த ஸ்திரீ, சபையைக் குறிக்கிறதென்று நம்புகின்றனர். ஆனால், சபை, இயேசுவைப் பெற்றெடுக்கவில்லை. மாறாக, இயேசு, சபையை ஸ்தாபித்தார். (மத்.16:18,19). இன்றும்,ஸ்திரீயினுடைய சந்ததி கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். (வெளி.12:17). இது, அந்தஸ்திரீ,பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள தேவனுடைய எல்லா மக்களையும் பொதுவாகக் குறிக்கிறதாக உள்ளது. இப்படிச் சொல்வது மிகவும் பொருந்தி வருகிறது. ஏனெனில், முதலாவது, தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலில் இருந்து இயேசு பிறந்தார் (மத்.2:6;லூக்கா 1:68-75;2:25-34,யோவான் 1:11;அப்.3:25,26; 13:22,23, எபி.7:14). இரண்டாவதாக, பிசாசின் துன்புறுத்தலுக்குப் பயந்து அந்தஸ்திரீ வனாந்தரத்திற்கு ஓடிப்போனது(வெளி.12:6) அந்த ஸ்திரீ, தேவனுடைய ஜனங்களென்று கருதியே சொல்லப்பட்டுள்ளது. அவளுடைய சந்ததியை சாத்தான் துன்புறுத்துவது. அந்தஸ்திரீ தேவனுடைய ஜனங்களென்பதை மேலும் குறிக்கிறது.

வெளி.12:7-9ல், வானத்தில் ஒரு யுத்தம் நடந்துள்ளது. வசனம் 7-ல், மிகாவேலும், அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே (சாத்தான்)யுத்தம் செய்துள்ளார்கள். வசனம்.8-ல் மிகாவேலும், அவனுடைய தூதர்களும் மேற்கொண்டுள்ளார்கள். வசனம்9-ல் சாத்தானும் அவனுடைய தூதர்களும் வானத்திலிருந்து பூமியிலே கீழே விழத் தள்ளப்பட்டார்கள். உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசென்று சாத்தான் வசனம் 9-ல் அடையாளப் படுத்தப்படுகிறான். எல்லா துன்மார்க்கத்திற்கும் அவன் இருப்பிடமாக உள்ளான்.மற்றும், துன்மார்க்கத்தில் நாட்டம் கொண்ட எல்லோருக்கும் அவன் ஆவிக்குரிய தகப்பனாகவும் உள்ளான்.(மாற்கு.4:15; யோவான்.8:44; 1யோவான் 3:8,10,வெளி:20:7-10) சாத்தான் ஒரு காலத்தில், தேவனுக்கு உண்மையுள்ள தூதனாக இருந்து, தேவனைக் கவிழ்த்துப் போடும்படியாய், அவன் பரலோகத்தில் வெற்றி பெற முடியாத ஒரு கலகத்தை நடப்பித்ததின் மூலம், தன்னைப்பின்பற்று

கிறவர்களுடன் அவன் பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான் என்றும், அதுமுதல் அவர்கள் தேவனுக்கு விரோதமாகப் போரிட்டுக் கொண்டுள்ளார்கள் என்றும், பிரிவினைச் சபைகளை உள்ளடக்கிய கிறிஸ்தவத்தில் ஒரு பலமான கருத்து உண்டு. வெளி.12:7-9 பகுதியானது, சில சமயங்களில், மனிதர்களின் இந்த தவறான கருத்திற்கு ஆதாரமாக பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இந்தப் பகுதியானது சாத்தானுடைய ஆரம்பம் பற்றிப் பேசுவதில்லை. ஏனெனில், இந்த யுத்தமானது, உலகம் உண்டாக்கப்பட்டதற்குப் பிறகுதான் நடந்துள்ளது. சாத்தான், வானத்தில், நம்முடைய தேவனுக்கு முன்பாக நின்று, இரவும் பகலும், சகோதரர்களுக்கு விரோதமாக குற்றம் சுமத்திக்கொண்டு வந்தான். (12:10). சிருஷ்டிப்புக்கு முன்பாகவே, குற்றம் சுமத்துவதற்கு, அங்கே சகோதரர்கள் இருந்திருக்க முடியாது. இரண்டாவதாக, சாத்தான், '' பூமியிலே விழத் தள்ளப்பட்டுள்ளான்'' (12:9). ஆகவே, இந்த யுத்தத்தின் போது, பூமியானது ஏற்கனவே இருந்துள்ளது. வெளி.12:7-9 பகுதியானது, சிருஷ்டிப்புக்குப் பிறகு, நல்லவர்களுக்கும், தீயவர்களுக்குமான யுத்தத்தையே விவரிக்கிறது. சாத்தான் எங்கிருந்து வந்தான் என்பதற்கு, வேதாகமம் திட்டமாக எதையும் குறிப்பிடுகிறதில்லை. தேவன் எதை வெளிப்படுத்தவில்லையோ, அது மறைபொருளாகவே இருக்க வேண்டும்.(உபா.29:29). வேதாகமத்தில், திட்டமாகச் சொல்லப்படாத எதற்கும், நம்முடைய அறிவைச் சார்ந்தோ அல்லது நமது கற்பனை வளத்தைப் பயன்படுத்தியோ காரியங்களை தீர்மானிக்கக்கூடாது. இது சாத்தானுடைய ஆரம்பம் பற்றியதற்கும் பொருந்தும்.(நீதி.3:5). மாறாக, நாம் தேவன் எதை சொல்லியிருக்கிறாரோ அதை மட்டுமே பேச வேண்டும். (1.பேதுரு.4:11) நாம் எதை விசுவாசிக்கிறோமோ அது தேவனுடைய வார்த்தையில் இருக்க வேண்டும். (ரோமர்.10;17).சாத்தான் எங்கிருந்து வந்தான் என்பது முக்கியமானதென்றோ அல்லது மனிதர்களுக்கு அது அவசியமான தென்றோ, தேவன் கருதவில்லையென்றே தெளிவாகத் தெரிகிறது. இப்பொழுது சாத்தான் எப்படியென்றும், நமக்கும் மற்ற மனிதர்களுக்கும் என்ன செய்ய முயற்சிக்கிறான் என்பதையும் அறிந்து கொள்வதுதான் முக்கியம். வெளி.12-ம் அதிகாரத்தில், குறிப்பாக இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள மிக முக்கியமான கருத்து இது.

வெளி.12:4-11 வசனப் பகுதியானது, தேவனுக்கும், அவருடைய வேலைக்குமான சாத்தானின் எதிர்ப்பையும், முடிவிலே சாத்தான் தோல்வியுறுவதையும் காட்டுகிறது.'' ஆண்பிள்ளையை'' உலகத்திற்கு 'அனுப்பி, தேவனுடைய வேலையைத் தடுத்து நிறுத்த சாத்தான் வெற்றி பெறாத முயற்சியை எடுத்தான். அந்த ஆண்பிள்ளை எல்லாவற்றின் மேலும் அதிகாரியாயிருக்கும்படி தேவனுடைய சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டது.(12:4,5). பிறகு சாத்தான்,அந்த ஸ்திரீக்கு எதிராகத் திரும்பினான். ஆனால்,வசனம்-6, 'ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றருபது நாளளவும்

அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது'' என்றுசொல்கிறது. சாத்தானுக்கு எதிராக தேவன் அந்த ஸ்திரீயைப் பாதுகாத்தார். வசனங்கள்.7-9, பரலோகத்திற்கு எதிரான தன்னுடைய யுத்தத்திலே தோற்றுப்போனான்.அந்தத் தோல்வியின் விளைவு 10-ம் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது; '' அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி இப்பொழுது இரட்சிப்பும், வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழ்த் தள்ளப்பட்டுப் போனான்'' கிறிஸ்துவின் மூலமாக மனிதனுக்கு இரட்சிப்பையும், அவருடைய நித்திய ராஜ்யம் (சபை) ஸ்தாபிக்கப்படுதலையும் கொண்டு வருவது, தேவனுடைய கிரியையாயிருக்கிறது. தேவனுடைய இந்த பலத்தையும், வல்லமையையும் சாத்தானாலே தடுத்து நிறுத்த முடியவில்லை. தேவனுடைய பிள்ளைகளைப் பொய்யாகக் குற்றம் சாட்டுவது, சாத்தானுடைய வேலையென்று நாம் பார்ப்பது போல (யோபு.1:9-11; 2:4-8) சாத்தான் என்ற வார்த்தையின் பொருளே, குற்றம் சாட்டுகிறவன் என்பதாகும்.(சக கிறிஸ்தவர்களை பொய்யாக நாம் குற்றம் சாட்டுகின்ற சோதனைக்கு உட்படுவதற்கு முன்பாக, நாம் இது குறித்து ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்) சாத்தானுடைய முழுமையான தோல்வி வசனம்11-ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது; ''மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும் படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.'' சாத்தானை மேற்கொள்ளும்படியான வழியை தேவன், மனிதனுக்குக் காட்டியிருக்கிறார்.11-ம் வசனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மூன்று காரியங்களினிமித்தமாக, அவ்வெற்றி கிடைக்கும். கிறிஸ்து சிந்திய இரத்தமானது, பாவமன்னிப்பை அருளுவதற்கும் (மத்.26:28;எபே.1:7;கொலே.1;14;எபி.9:22) பாவம் செய்வதிலிருந்து நம்மைத் தடுத்து நிறுத்துவதற்கும் அவசியமானதாகவும் , போதுமானதாகவும் உள்ளது. (எபே.6:10-17;எபி.9:14;13:20,21; 1.யோவா. 1:7-9;2:1). கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு, தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதின் மூலமும், அதற்குக் கீழ்ப்படிவதன் மூலமும் கிடைக்கிறது. (ரோமர் 10:17;அப்.2:38;எபி.5:9). இறுதியாக, பாவத்தை எதிர்ப்பதினிமித்தம் மரணத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், தேவனுக்காக மாத்திரம் வாழ்ந்து அவருக்கு ஊழியம் செய்பவர்களால் மாத்திரமே ஜெயத்தை பெற்றுக்கொள்ள முடியும். (லூக்.14:26-33; பிலி.2:5-8; 2கொரி.5:14,15, எபி.12:1-4; 1பேதுரு.4:1,2; வெளி.2:10).

பரலோகத்திற்கெதிரான யுத்தத்தில் சாத்தான் தோல்வியுற்றதை வசனம் -12 இவ்விதம் கூறுகிறது.''ஆகையால்,பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே களிகூறுங்கள்''.ஆனால், அவன் பூமியிலே, தள்ளப்பட்டிருக்கிறபடியால் வசனம் தொடர்ந்து பூமியிலும், சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ பிசாசானவன் தனக்குக் கொஞ்சக் காலமாத்திரம்

உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்து வரும் என்று கூறுகிறது. சாத்தான் மீதும்,மரணத்தின் மீதும் கிறிஸ்து வெற்றி கொண்டு (ரோமர்.6:9,10;எபி.2:14,15) இரட்சிப்பின் வழியை வெற்றிகரமாக கொடுத்ததிலிருந்து, மிகக்குறுகிய காலத்தில் அவன் நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய நரகத்தில் தள்ளப்படுவான் என்பதை அறிந்து, அவன் கோபத்தினால் நிறைந்திருக்கிறான். (மத்.8:28,29;25:41; வெளி.20:10). வசனம்,13 ''வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது''. கிறிஸ்துவைக் கொண்டு செய்யப்பட்ட பரலோகத்தின் வேலையை சாத்தானாலே, தடுத்து நிறுத்த முடியாமல் போனது. இப்பொழுது, அவனுடைய நேரம் கடந்துகொண் டிருக்கிறது. ஆகையால், அவன் தனது உக்கிரத்தை தேவனுடைய ஜனங்களைக் குறிக்கிறதென்று நம்பப்படுகின்றஸ்திரீயின் பக்கமாய் திருப்பினான். 1.பேதுரு.5:8,9 பகுதியானது, இதைப் போலொத்த சூழ்நிலையில், கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறது; ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள், உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே'' என்று சொல்கிறது.

1260 நாட்களுக்கு அதாவது $3^{1/2}$ ஆண்டுகளுக்கு அந்த ஸ்திரீயை தேவன் பாதுகாத்து போஷித்தார்.(11:13யையும் பார்க்கவும்) இந்தக் கால அளவு முடிவுறாத கால அளவை முக்கியப்படுத்துகிறது. (ஏழில் சரிபாதி) அந்தஸ்திரீ மீண்டும் பிசாசாலே தாக்குதலைச் சந்திக்க வேண்டி வரும் என்பதைக் குறிக்கிறது. இது அப்படியே வசனம்13-ல் நடந்தது. ''பிசாசை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' என்று தேவன் சொல்லுகிறார்.அந்த ஸ்திரீயின் காரியத்தில் அது அப்படியே நடந்தது. ஆனால் பிசாசு திரும்ப வரும். இயேசு பிசாசை எதிர்த்தபொழுது, ''அவன் சிலகாலம் அவரைவிட்டு விலகிப்போனான்''. (லூக்.4:13). அவன் கிறிஸ்துவை சோதிக்க மீண்டும் வந்தது போல, அவன்அந்த ஸ்திரீயைத் தாக்க திரும்பவும் வந்தான். (12:13). ஆனால், தேவன் மீண்டும் பாதுகாப்பைத் தந்தார். வெளி.12:14, ''ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்க தாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்து போகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது'' என்று கூறுகிறது. இந்த பாதுகாப்பு, முன்போலவே, முழுமையற்ற ஒரு காலத்திற்குத் தான்.(ஒரு காலம் என்பது ஒன்றுக்குச் சமம்; காலங்கள் என்பது இரண்டுக்குச் சமம், அரைக்காலம் என்பது, ஒன்றில் பாதிக்கு சமம், இது எல்லாம் சேர்ந்து $3^{1/2}$).ஆகையால் சாத்தான், வசனம் 15-ல் திரும்பினான்.''அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டு போகும் படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது.ஆனால் வசனம்16-ல், தேவன் அந்த ஸ்திரீயை மீண்டும் விடுவித்தார்; பூமியானதுஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத்

திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது. தேவனுடைய கட்டுப்பாட்டை மீறி பிசாசால், எதுவும் ஒருபோதும் செய்யமுடியவில்லை.(யோபு.1:2,1.கொரி.10:13). தேவனுடைய சர்வாயுதத்தை தரித்தவர்கள் எல்லோரும் பிசாசை எப்பொழுதும் எதிர்க்க முடிகிறது.(எபே.6:10-17)ஆனால், பிசாசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காமல், தனது துன்மார்க்கமான தாக்குதல்களை கிறிஸ்தவர்கள் மீது தொடுத்துக் கொண்டிருக்கிறான். ''அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுக் கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவருடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று'' (12:17).

வெளிப்படுத்தல் 12-ம் அதிகாரம், சில மகத்தான பாடங்களை நமக்குப் போதிக்கிறது. முதலாவது, நமக்கு எதிரான சாத்தானின் விடாப்பிடியான தாக்குதல்களில் அவனை எதிர்த்துப் போரிட்டு, மேற்கொள்வதற்கு அவசியமான எல்லாவற்றையும் நமக்குத் தந்து, நம்மைப் பாதுகாக்கும் திராணி உள்ளவராக தேவன் இருக்கிறார். தப்பிக்கொள்ளும்படியான போக்கை, தேவன் எப்பொழுதும் நமக்குத் தருகிறார். (1.கொரி.10:13)சகலத்தையும் நம்முடைய நன்மைக் கேதுவாக நடப்பிக்கிறார். (ரோமர்.8:28) இன்னும், இவ்வதிகாரத்தில் சாத்தான் தீமை செய்வதற்கு அவன் எவ்வளவு தூரம் செல்வான் என்றும், தீமையான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவன் வசமுள்ள தந்திரங்கள் என்னவென்றும் கற்றுக்கொள்கிறோம்.ஓய்வு, ஒழிச்சலில்லாமல் அவன் கிறிஸ்தவர்களுக்கெதிராய் போர்த்தொடுக்கிறான். (வெளி.12:17,1.பேதுரு 5:8,9) அவன் மிகுந்த வல்லமையுள்ளவனாயிருக்கிறபடியால் அவன் தந்திரங்களை நாம் அறியாதிருக் கக்கூடாது. மிக முக்கியமான, சாத்தானைக் காட்டிலும், மிக அதிகமான வல்லமை யுள்ளவராக தேவன் இருக்கிறாரென்று கற்றுக்கொள்கிறோம். அது மாத்திரமல்ல, சாத்தானின் எல்லாத் தந்திரங்களையும் மேற்கொள்ளும் வழியை நமக்குக் கொடுக்கிறார்.(எபே.6:10-17;2.கொரி.10:3-6)தேவனையும், நம்முடைய எதிராளியையும் ஒப்பிடுகையில், 1.யோவான்.4:4 ''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலுள்ளவர் பெரியவர்'' என்று கூறுகிறது. வெளிப்படுத்தல் 12-ம் அதிகார மானது, துன்புறுத்தப்பட்டு பாடுகளை அனுபவித்த முதல் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கொடுத்தது. மற்றும், இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற உண்மைக் கிறிஸ்தவர்களுக்கும் இது தொடர்ந்து ஆறுதலைக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.1.கொரி.15:57,58-ல் சொல்லப்பட்டிருப்பதைக் காட்டிலும் மேலானதொரு கருத்துச் சுருக்கத்தை இவ்வதிகாரத்திற்கு நாம் கொடுக்க முடியாது. அப்பகுதி, ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால் எனக்குப்பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக'' என்று கூறுகிறது.

**Jon Macon** **EZSR**

# கிறிஸ்துவின் சபை ஆதிகிறிஸ்தவர்களைப் போலவே பாடல் மூலம் ஆராதிக்கிறது

ஆராதனையில் இசைக்கருவிகளை புறக்கணிப்பதால் கிறிஸ்துவின் சபையார் தங்களைத் தனிமைப்படுத்திக் காட்டிக்கொள்ளவோ அல்லது இசைக்கருவிகள் வாங்க ஆகும் செலவுகளை குறைக்கவோ முயற்சிப்பதில்லை. அவர்களை பொறுத்தமட்டில், அது கொள்கை ரீதியானதேயன்றி சூழ்நிலைக்கேற்ப செயல்படுவதில்லை. கேட்கப்படுகிற எல்லா கேள்விகளுக்கும் (வேதத்திலிருந்து) சரியான பதிலை ஆராய்ந்து அறிந்துள்ளனர். தேவனை ஆராதிக்கும்போது இசைக்கருவிகளை பயன்படுத்த இயேசு கிறிஸ்து அதிகாரம் அளித்திருக்கிறாரா? வேத வசன ஆய்வில் காணும்போது அப்படியொரு கட்டளையோ, கற்பனையோ, இசைக்கருவிகளை பயன்படுத்தியமைக்கான மாதிரியோ கொடுக்கப்படவில்லை, என்ற முடிவுக்கு வந்துள்ளனர். மத்தேயு.17:5 28:18; யோவான்.14:6 ஆகிய வசனங்களைக் காண்க. புதிய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தும்படி காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு இசையும் வெறும் வாய்ப்பாடல்கள் மட்டுமே. அப்போஸ்தலர்.16:25 ரோமர் 15:9; 1.கொரி.14:15,எபே.5:19; கொலோ.3:16; எபி.2:12; யாக்.5:3

## ஆராதனைக்கான கட்டளை

புதிய ஏற்பாட்டு ஆராதனைக்கான கட்டளை யோவான்.4:24-ல் கூறப்பட்டுள்ளது.தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத்தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்றார் (யோவா.4:24). இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட இந்த ''ஆவியோடும் உண்மையோடும்'' அமையாத வேறெந்த தொழுகையும் சரியானதல்ல. ''உண்மையோடு'' (சத்தியம்) என்றால் என்ன? ''உம்முடைய சத்தியத்தினாலே (உண்மையினாலே) அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' (யோவா.17:17)புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக்கருவி பயன்படுத்த பரிந்துரைக்கும் வேத வசனம் எது? எங்குமே வேதத்தில் அப்படியொரு வசனம் இல்லை. எனவே இசைக்கருவியின் பயன்பாடு வேத வசனமாகிய உண்மையோடு (சத்தியத்தோடு) அமைந்ததல்ல. ஏனெனில், ''வசனமே சத்தியம் (உண்மை)''. எனவே ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துவது யோவான். 4:24-ல் கூறப்பட்டுள்ள ஆராதனைக்கான கட்டளையை மீறுவதாகும்.

உண்மையான ஆராதனைக்கு எதிரானது வீணான ஆராதனை. புதிய ஏற்பாட்டினால் அங்கீகரிக்கப்படாத எந்தவகை ஆராதனையும் வீணானதும், பிரயோஜனமற்றதுமாகும். மத்.15:9-ல் இயேசு ''மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்...'' என்று

கூறினார். இந்த வாக்கியத்தின் பொருளடக்கத்தில் பரிசேயர்கள், கர்த்தருடைய சீஷர்கள் கைகழுவாமல் போஜனம் பண்ணினதை எதிர்த்து கண்டனம் தெரிவித்தனர். ஆனால் தேவன் கை கழுவி சாப்பிடவேண்டும் என்றொரு கட்டளையை எங்கும் கொடுக்கவில்லை. பரிசேயர்கள்தான் இப்படிப்பட்ட பழக்கம் தேவனுக்கு நேரடியாக செலுத்துகிற ஆராதனை என்றும், தவறுபவர்கள் ஆவிக்குரிய முறையில் தீட்டுப்பட்டவர்களும், தேவனுக்குப் பிரியமில்லாதவர்களுமாய் இருப்பதாக போதித்தனர். இப்படிப்பட்ட செயல் மனிதனுடைய கற்பனையைப் புகுத்துவதாகும். கைகழுவாமல் சாப்பிடுவது எவ்வகையிலும் எந்த தனிநபருக்கும் ஆவிக்குரிய கெடுதியைக் கொடுப்பதில்லை. மத்.15 :20ஐ வாசித்து பாருங்கள். ''வீணான ஆராதனை'' என்று இயேசுக் கிறிஸ்து குறிப்பிட்டதன் மூலம், அவர்களின் மேற்குறித்த உபதேசத்தை கடிந்து கொண்டதுடன், மனிதனால் கொண்டு வரப்பட்ட வேறெந்த கற்பனையும் மார்க்கரீதியில் தவறானது என்று காட்டுகிறார்.

''கை கழுவிக்கொண்டு சாப்பிடுவது'' எவ்வகையிலாகிலும் தவறா? என யாராவது கேட்கலாம். ஒழுக்க ரீதியில் அது தவறானதல்ல; மார்க்க ரீதியில் கற்பனையாக கொண்டு வருவது தவறாகும். ஒரு செயல் ஒழுக்க ரீதியில் சரியாக இருக்கலாம். மார்க்க ரீதியில் அது தவறானதே. பின்வரும் உதாரணங்களை ஆராய்ந்து பாருங்கள். 1.மாட்டு இறைச்சி பதார்த்தங்களையும், முட்டைகளையும் ஒழுக்க ரீதியில் சரியானதே, ஆனால் அதையே மார்க்க ரீதியில் சடங்காச்சாரமாகவும், ஆராதனையில் ஒரு பாகமாகவும் செயல் படுத்தக் கட்டளையிடுவது தவறானது. 2. ஒரு குழந்தையை குளிப்பாட்ட தண்ணீரை அதன் மீது தெளிப்பது ஒழுக்க ரீதியாக சரியானது, ஆனால் அதையே மார்க்க ரீதியில் ஒரு சடங்காச்சாரமாக்குவது தவறானது.3. பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ் காரியத்திற்காக இசைக்கருவிகளை பயன்படுத்துவது ஒழுக்க ரீதியில் சரியானது, அதுவே தேவ ஆராதனையின் போது இசைக்கருவி வாசிக்க வேண்டும் எனும் கட்டளை மார்க்க ரீதியாக பிறப்பிக்கப்படுவது தவறானது.

**பழைய ஏற்பாட்டின் உதாரணங்களிலும் இசைக்கருவி அதிகாரம் பெறவில்லை**

பழைய ஏற்பாட்டில் பாடியதாகக் காணப்படும் மாதிரிகளிலும் ஆராதனையின் போது இசைக்கருவி கர்த்தருடைய சபையில் பயன்படுத்துவதை பரிந்துரைப் பதில்லை. பழைய ஏற்பாடு இனியும் மார்க்க ரீதியான உபதேசத்திற்கும் ஆசரிப்புக்கும் கட்டுப்படுத்தும் பிரமாணமன்று. (எபிரேயர்.10:9,10; கொலோ.2:14). கிறிஸ்துவே சபையின் மார்க்க ரீதியிலான தலையாய அதிகாரம் பெற்றவர் மோசே அல்ல. (யோவா.1:17;எபி.8:6) கிறிஸ்து ஆராதனையில் வாத்தியக் கருவிகளை பயன்படுத்த அதிகாரம் அளிப்பதில்லை. கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள எந்த கிறிஸ்தவர்களும் அதை புறக்கணிக்கின்றனர். ஏனெனில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கர்த்தருடைய சித்தத்தை அவர்கள் மதிக்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் " நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்கிறார்.(கலா.4:21) ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்துவதை நியாயப்படுத்த பழைய ஏற்பாட்டை ஒருவர் ஆதாரமாக்கினால், அவர் பழைய ஏற்பாட்டின் மற்ற எல்லா காரியங்களையும் கைக்கொண்டு ஆராதிக்க வேண்டும். உதாரணமாக, தூபங்காட்டுதல், மிருக பலி போன்றவற்றையும் செயல்படுத்தவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு உட்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களில், மேற்குறித்த பழைய ஏற்பாட்டு ஆசரிப்புகள் சேர்க்கப்படவில்லை என்கிற எளிய காரணத்தால் கிறிஸ்துவின் சபையார் அப்படிப்பட்ட ஆசரிப்புகளை செயல்படுத்துவதில்லை.

## வரலாற்றுத் தகவல்

பிராந்திய சபைகளில், அப்போஸ்தலர்களின் காலத்தில் கூட கர்த்தருடைய ஜனங்கள் இசைக்கருவி பயன்படுத்தியமைக்கு உறுதியான ஆதாரம் எதுவுமில்லை.

ஆராதனையில் வாத்தியக் கருவியின் பயன்பாடு கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தான் தோற்றமளித்தது. வித்தியாசப்பட்ட பகுதிகளில் இதன் அறிமுகம் வித்தியாசப்பட்ட காலக்கட்டங்களில் உண்டாயிற்று.எனவே, பொதுவான இசைக்கருவி பயன்பாடு கி.பி.எட்டாம் நூற்றாண்டில்தான் அமுலுக்கு வந்தது என்பது பாதுகாப்பான ஒரு கூற்று.சிறப்பான வரலாற்று ரீதியின் கண்ணோட்டத்தில் நிபுணத்துவக் கூற்றுப்படி, அப்போஸ்தலர்கள் கால ஆராதனை வெறும் வாய்ப்பாடல்கள் மட்டுமே செயலாக்கப்பட்டது என்கிறது. "பாடலுடன் இசை என்பது அநேக நூற்றாண்டுகளுக்குப்பிறகு இடம்பெற்றது" (கர்ட் பாஃலென், "உலக இசை" - பக்கம் 27).

"ஆதி சபையில் வாத்திய இசைக்கருவிகள் வாசிக்கப்படாமல், பாடுதல் மட்டுமே அனுமதிக்கப்பட்டது" (உறுதோ லெச் டென்டிரிட் என்பவர் தமது "இசைவரலாறு மற்றும் ஆலோசனைகள்" என்னும் புத்தகம் பக்கம்.34).

"தெய்வீக ஆராதனையில், ஆரம்ப காலத்தில் எங்கும் வாய்ப்பாடல்கள் மட்டுமே இசையாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை" (எமில் நாவ்மேன் என்பவர் தமது "இசையின் வரலாறு" எனும் புத்தகத்தில் பக்கம்.177)

"ஆரம்ப கட்டத்தில் சபையில் ஆராதனை என்பது, கலை நுணுக்கம் அற்ற, பாடல்களை இருக்கிறபடி மனப்பாடமாய் ஒப்புவிக்கிறதற்கு ஒப்பாகவே இருந்தது. ஆனால், மார்க்க எதிரிகள் ஆர்த்தடெக்ஸ் சபையை பலவந்தம் பண்ணி, கலையில் மிக அதிக்மான கவனம் செலுத்த பலவந்தம் பண்ணினர். இசைக்கருவியற்ற சமய சார்பின்மைக்கு எதிரான வன்முறைகள் தோன்றி,வலுத்தது. பாடலுடன் இசைக்கருவி பயன்பாட்டுக்கு எதிர்ப்பு நீடித்தது" (ஜான் கர்ட்ஸ், சபை வரலாறு,பாகம்.1 பக்கம் 376).

''ஆதிக்கிறிஸ்தவர்களின் ஆராதனையில் அனைத்து இசைகளும் வாய்ப்பாட்டுகள் மட்டுமே'' (ஃபிரேன்ங் லண்டன் ஹம்ப்ரேய்ஸ்,சபையில்இசை பரிணாமம் பக்கம்.42).

''சங்கீதங்களையும் கீர்த்தனைகளையும் பாடுவதற்குப் பதிலாக நரம்பிசைக் கருவிகளையும் பல்வகை பிற இசைக்கருவிகளையும் பயன்படுத்துவோரை கிண்டல் செய்கிறார். அகஸ்டின் என்பவர் விசுவாசிகள் தங்கள் இருதயங்களை நாடகமேடை இசைக்கருவிகளுக்கு சாய்க்கவேண்டாம் என்று வலியுறுத்துகிறார். தங்களுடைய ஆன்மீக, ஆவிக்குரிய ஆராதனையில், இசைக்கருவிகளை வாசிப்பது புலன் உணர்வுகளையும், நரம்புகளையும் பாதிக்கச் செய்வதுடன் முரண்பாடான சீர்கேடான சூழ்நிலைகளை உருவாக்குவதாக ஆதிக் கிறிஸ்தவர்கள் மார்க்க வழிகாட்டிகள் உணர்ந்தனர். அவர்களின் உயர்ந்த மார்க்க மற்றும் ஒழுக்க உணர்வுகளுக்கு புறம்பான தூண்டு விசை ஒன்றும் தேவையற்றது. சுத்தமான (தெளிவான) குரல் ஒலிதான் அவர்கள் தங்களின் விசுவாசத்தை வெளிப்படுத்தும் சரியான கருவி'' (எட்வர்ட் டிக்ஸன்; மேற்கத்திய சபையின் வரலாற்றில் இசை.பக்.55).

''சபையில் இசை என்பது அப்போஸ்தலர் காலந்துவங்கி சரித்திரம் படைத்தது. ஆனால் வாத்திய இசைக்கருவி அப்படிப்பட்டதல்ல, இசைக் கருவியின் பயன்பாடு மிகவும் புராதானக் காலத்தது தான். ஆகிலும், சபை ஆராதனையில்பயன்படுத்தப்படவில்லை'' (ஜோசப் பிங்காம், ''ஓர்க்ஸ்'' எனும் புத்தகம், லண்டன் பதிப்பு,பாகம்.2 பக்கம்.482).

## முடிவுரை

மேற்கண்ட ஆதாரங்கள் நமது உள்ளங்கை நெல்லிக்கனியாய் இருப்பதால், முடிவுரை தவிர்க்க இயலாதது. இசைக்கருவி ஆரம்ப கால சபை ஆராதனையில் பயன்படுத்தப்படவில்லை. ஆதிக்கிறிஸ்தவர்களைப் போலவே கிறிஸ்துவின் சபையார் இன்று பாடல்களினால் தேவனை ஆராதிக்கின்றனர். இதுவே வசன ரீதியிலானது. இதுவே பாதுகாப்பானது. தேவனை ஆராதிக்கிற எல்லா காரியத்திலும், புதிய ஏற்பாடு நமக்கு நியமித்து வைத்துள்ள திட்டத்தின்படியாக மாத்திரம் பின்பற்றுவோமாக.

E.A. ஆறுமுகம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***
***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

Designed by : Aarthi Computers, 811-Brough Road, Erode-1. Ph : 260971

REGISTERED NEWS PAPER

RNI No. 47661 / 87 - NEW DEL

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு

செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்

நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக

முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**

த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**